




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 212 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை | Chennai | Volume: 01 | Issue: 212 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# இந்தியாவில் எல்பிஜி உற்பத்தி 30% அதிகரிப்பு:
# மக்கள் பீதி அடைய வேண்டாம் என மத்திய அரசு அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 15:**




எல்பிஜி சிலிண்டர்கள் உற்பத்தி 30 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் பீதி அடைய வேண்டாம் என மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள ஈரான்-அமெரிக்கா, இஸ்ரேல் மோதல் காரணமாக இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி கிட்டத்தட்ட மூடப்பட்டுள்ளதால், கத்தார் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இருந்து எல்பிஜி வருவது தடைபட்டுள்ளது.

இதனால், கடந்த சில நாட்களாக வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அச்சமடைந்த மக்கள், வீட்டு உபயோக சிலிண்டருக்கான புக்கிங்கை அதிக அளவில் செய்யத் தொடங்கினர். போன் மூலம் அதிக அளவில் புக்கிங் செய்யப்படுவதால் அந்த சிஸ்டம் செயலிழந்தது. இதையடுத்து எல்பிஜி ஏஜென்சி முன்பு அதிக அளவில் பொதுமக்கள் குவியத் தொடங்கினர்.

இந்நிலையில், எல்பிஜி சிலிண்டர் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் மத்திய அரசு நேற்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை இணை செயலர் சுஜாதா சர்மா கூறியதாவது: வழக்கமாக தினந்தோறும் நாடு முழுவதும் 55.7 லட்சம் பேர் எல்பிஜி சிலிண்டர் புக்கிங் செய்வார்கள். சிலிண்டர் கிடைக்காது என்று கருதி, கடந்த சில நாட்களாக 75.7 லட்சம் பேர் சிலிண்டருக்காக புக்கிங் செய்து வருகின்றனர்.

இதையடுத்து, இந்தப் பிரச்சினையை சரி செய்யும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. இதற்காக எல்பிஜி சிலிண்டர் உற்பத்தியை 30 சதவீதம் அதிகரித்துள்ளோம். எனவே, சிலிண்டர் கிடைக்காது என பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம்.

புக்கிங் செய்யும் அனைவருக்கும் காஸ் சிலிண்டர் நிச்சயம் கிடைக்கும். மக்கள் பீதி அடையாமல் இருக்கவேண்டும். மக்களுக்கு 100 சதவீத காஸ் சிலிண்டர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே, இதுதொடர்பாக யாரும் பொய்யான தகவல்களை பரப்பி பொதுமக்களை பீதி அடையச் செய்ய வேண்டாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உணவகங்கள், டீக்கடைகளுக்கு மின்சார மானியம்: தமிழக அரசின் அதிரடி அறிவிப்பு

சென்னை: நாட்டில் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் உள்ள உணவகங்கள், டீக்கடைகளுக்கு யூனிட்டுக்கு ரூ.2 மின்சார மானியம் வழங்கப்படும் என்று மின்வாரியத் தலைவர் ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

உணவு தயாரிக்கும் உணவகங்கள் எரிவாயுவுக்கு பதிலாக மின் அடுப்பு பயன்படுத்தியதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட மின்சார மானியமாக யூனிட்டுக்கு ரூ.2 சலுகை அறிவித்துள்ளது தமிழக அரசு.

மேலும், தொழிற்சாலைகள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவின்றி மாற்று எரிவாயுவை பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சிலிண்டர் தேவை, கையிருப்பு தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் அதிகாரிகள் ஆலோசனை நடத்திய நிலையில், தலைமைச் செயலகத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது அவர்கள் கூறுகையில், எரிவாயுவுக்கு பதில் மின் அடுப்பு பயன்படுத்துவதற்காக யூனிட்டுக்கு ரூ.2 மின்சார மானியமாக வழங்கப்படும். மத்திய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு சிலிண்டர் கட்டுப்பாடு இருக்கும் வரை இந்த சலுகை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(15-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-1
பிறை: தேய்பிறை
திதி
ஏகாதசி காலை 8.23 வரை பிறகு துவாதசி.
நட்சத்திரம்:
திருவோணம் மறுநாள் விடியற்காலை 5.13 வரை பிறகு அவிட்டம்.
யோகம்
அமிர்த / மரணயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி.
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி.
சூலம் -மேற்கு
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | நிறைவு |
| ரிஷபம் | நிறைவு |
| மிதுனம் | விருத்தி |
| கடகம் | வரவு |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | நலம் |
| துலாம் | பெருமை |
| விருச்சிகம் | இன்பம் |
| தனுசு | உயர்வு |
| மகரம் | ஆதரவு |
| கும்பம் | உதவி |
| மீனம் | கடமை |

## தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் தேதியை ஓரிரு நாட்களில் தேர்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்பு

**சென்னை, மார்ச் 15:**

தமிழ்நாடு, புதுவை, கேரளா, மேற்குவங்காளம் ஆகிய 5 மாநிலங்களின் சட்டப்பேரவை பதவிக்காலம் மே மாதத்துடன் முடிவடைகிறது. எனவே, இந்த மாநிலங்களில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடத்த வேண்டியுள்ளது.

இதனால், தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு, கேரளா, புதுவையில் ஒரே கட்டமாகவும், மேற்கு வங்காளம், அசாமில் பல்வேறு கட்டங்களாகவும் தேர்தல் நடத்தப்படுவது வழக்கம்.

வரும் சட்டமன்ற தேர்தலிலும் இதே முறை பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் இரண்டாவது வாரத்திற்கு மேல் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தேர்தலுக்கான தேதி இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது.வரும் 15 அல்லது 16-ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் தேதி பிப்ரவரி கடைசி வாரத்தில் வெளியானது. தமிழகத்தில் ஏப்ரல் 6 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மேற்கு வங்காளத்தில் 8 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், மே 2 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

# 5 ஆண்டு கால ஆட்சி நிறைவு?
# நிலுவை அரசாணைகளை உடனே பிறப்பிக்க ஆணை

**சென்னை, மார்ச் 15:**

தமிழ்நாடு, கேரளா, புதுவையில் ஒரே கட்டமாகவும், மேற்கு வங்காளம், அசாமில் பல்வேறு கட்டங்களாகவும் சட்டசபை தேர்தல் நடத்தப்படுவது வழக்கம். வரும் சட்டசபை தேர்தலிலும் இதே முறை பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் இரண்டாவது வாரத்திற்கு மேல் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தி.மு.க. தலைமையிலான அரசு கடந்த 7.5.2021 அன்று பொறுப்பேற்றது. பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை இந்த அரசு அமல்படுத்தியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த இந்த ஆட்சி நேற்று (14-ந் தேதி) நிறைவடையும் என்று கூறப்படுகிறது. ஏனென்றால், இன்று (15-ந் தேதி), தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாக தெரிய வந்துள்ளது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே, மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வரும். இது நடைமுறைக்கு வந்ததும், அரசுப் பணிகளில் புதிய அறிவிப்புகள் வெளியிடுவது மற்றும் அரசு இயந்திரத்தை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவது தடை செய்யப்படும். முதல்-அமைச்சர், அமைச்சர்கள் யாரும் அரசு வாகனங்களை பயன்படுத்த முடியாது.

தலைமைச் செயலகத்திற்கு வந்து அவர்கள் ஆலோசனை செய்ய முடியாது. முக்கிய திட்டங்களை அறிவிக்கவும் முடியாது. ஏதாவது மிக முக்கிய பிரச்சினை என்றால் மட்டுமே அரசு உயர் அதிகாரிகளை முதல்-அமைச்சர் அல்லது அமைச்சர்கள் அழைத்து ஆலோசிக்கலாம். அதுவும், தேர்தல் கமிஷனின் உத்தரவை பெற்றுத்தான் செயல்பட முடியும்.அடுத்த ஆட்சி அமையும் வரை இந்த அரசு காபந்து அரசாக செயல்படலாம். 15-ந் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப்படுகிறது என்றால், நேற்று தான் (14-ந் தேதி) இந்த ஆட்சியின் நிறைவு நாளாக இருக்கும். எனவே முக்கிய துறைகளின் அதிகாரிகளை, நேற்று விடுமுறை நாளென்றாலும் மேலதிகாரிகள் வேலைக்கு வரவழைத்துள்ளதாக கூறப்படுகிறது. நிலுவையில் உள்ள சில ஆணைகளுக்கான கோப்புகளை முடித்து வைக்கவும், கோப்புகளை நிலுவையில் வைக்காமல் இறுதி செய்யவும் அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு




**சென்னை, மார்ச் 15:**

பத்திரிகையாளர் சங்கத்தின் பிரநிதிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்தனர். அப்போது அவர்கள் பெற்று வரும் ஓய்வூதியத்தில் உயர்வு, மருத்துவக் காப்பீடு, வீட்டுவசதி உள்ளிட்ட கோரிக்கைகளை முதல்வரிடம் முன்வைத்தனர்.

பத்திரிகையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்கும் வகையில் பத்திரிகையாளர்கள் தற்போது பெற்று வரும் ஓய்வூதியம் மாதம் ரூ.12 ஆயிரத்தில் இருந்து ரூ.15 ஆயிரமாகவும் குடும்ப ஓய்வூதியம் ரூ.6ஆயிரத்தில் இருந்து ரூ.7,500ஆகவும் உயர்த்தி முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சென்னை பத்திரிகையாளர்கள் குடியிருக்க வீடு அல்லது வீடுகட்ட நிலம் ஒதுக்கித் தரவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செங்கல்பட்டு மாவட்டத்தில் வீட்டு மனைகள் வழங்க ஏற்பாடு செய்யவும், இதற்கு பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் தொடங்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார் என அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரான் புதிய தலைவர் பற்றிய தகவலுக்கு ரூ. 92 கோடி சன்மானம்! அமெரிக்கா

**ஈரான், மார்ச் 15:**

ஈரானின் புதிய உச்ச தலைவர் மோஜ்தபா கமேனி பற்றி தகவல் அளித்தால் ஒரு கோடி டாலர் சன்மானம் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல்-அமெரிக்கா கூட்டாக தாக்குதல் தொடங்கிய முதல் நாளிலேயே (பிப்ரவரி 28) ஈரானின் உச்ச தலைவரான தலைமை மதகுரு அயதுல்லா கமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து, அவரின் மகன் மோஜ்தபா கமேனி புதிய தலைமை மதகுருவாக தேர்வு செய்யப்பட்டார். ஈரான் மக்களுக்கு அவரது அறிக்கை அரசுத் தொலைக்காட்சியில் வியாழக்கிழமை வாசிக்கப்பட்டது. அதில், இஸ்ரேல் மீதும், அமெரிக்க நிலைகள் உள்ள வளைகுடா நாடுகள் மீதும் ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, ஜெருசலேமில் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, மோஜ்தபா கமேனியின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்றார்.இந்த நிலையில், ஈரானின் புதிய உச்ச தலைவர் மோஜ்தபா கமேனி உள்பட 10 தலைவர்களின் விவரங்களை வெளியிட்டுள்ள அமெரிக்க அரசு, இவர்கள் குறித்து தகவல் அளித்தால் ஒரு கோடி டாலர் (இந்திய மதிப்புபடி ரூ. 92+ கோடி) வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோஜ்தபா கமேனி அலுவலகத்தின் துணைத் தலைவர், பாதுகாப்புத் துறை செயலாளர், ராணுவ ஆலோசகர், உள்துறை அமைச்சர், புலனாய்வுத் துறை அமைச்சர் ஆகியோரின் பெயர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

மேலும், இவர்கள் அனைவரும் உலகம் முழுவதும் பயங்கரவாதத்தைத்திட்டமிட்டு நடத்தும் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையை வழிநடத்தும் நபர்கள் என்று அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## மொஜ்தபா கமேனி கோமா நிலையில் உள்ளாரா?

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றன. இந்த போரில் இஸ்ரேல் முன்னெப்போதும் இல்லாத வகையில் வலிமையாக இருப்பதாக அந்த நாட்டு பிரதமர் நேட்டன்யாகு நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.அப்போது அவரிடம், ஈரானின் புதிய உச்சத் தலைவர் மொஜ்தபா கமேனி மற்றும் ஹிஸ்புல்லா தலைவர் நயீம் காசேம் ஆகியோரை இஸ்ரேல் குறிவைத்திருக்கிறதா? என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், "எந்த பயங்கரவாத தலைவருக்கும் நான் ஆயுள் காப்பீடு பாலிசி எடுக்கமாட்டேன்" என தெரிவித்தார். இதன் மூலம் ஈரானின் புதிய உச்சத் தலைவரையும் இஸ்ரேல் குறிவைத்திருப்பது தெரியவந்துள்ளது.

ஈரானில் உச்சத் தலைவரை படுகொலை செய்துள்ள நிலையில், இனி அங்கு புதிய அரசு அமைவதற்கு அந்த நாட்டு மக்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறிய நேட்டன்யாகு, "தாகமாக இருக்கும் ஒருவருக்கு நீரை காட்டத்தான் முடியும்; அவரை குடிக்க வைக்க முடியாது" என்றும் தெரிவித்தார்.இதனால் ஈரானின் புதிய உச்சத் தலைவரையும் இஸ்ரேல் குறிவைத்து இருப்பதாக சர்வதேச நோக்கர்கள் கூறும் நிலையில், மொஜ்தபா கமேனியின் உடல்நிலை குறித்தும் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது. அயத்துல்லா கமேனி உயிரிழந்த அதே தாக்குதலில் அவரது மகன் மொஜ்தபா கமேனியும் படுகாயமடைந்து கோமா நிலையில் இருப்பதாக பிரிட்டன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மொஜ்தபா கமேனிக்கு ஒரு கால் துண்டிக்கப்பட்டதுடன், கல்லீரல் பகுதியில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. தற்போது டெஹ்ரானில் உள்ள சினா மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இஸ்லாமிய புரட்சிகர ராணுவப் படையின் பிரிவுகள் தனித்தனி கட்டுப்பாட்டில் செயல்பட்டு, போர் நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்தி வருகின்றன என்று அதில் கூறப்பட்டுள்ளது.




## மானாமதுரை அருகே கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிக்கு சிறப்பு பூஜை!



**மானாமதுரை ,மார்ச் 15:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட் டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட் டுக்கோல் மாயாண்டி சுவா மிகள் முதல் ஜீவ ஒடுக்கம் கோவில்உள்ளது. மாயண்டி சுவாமி தன் சீடர்க்கு 48 நாட் கள் தவமிருந்து தன்உள்ளங் கையில் காசி ராமேஸ்வரம் கோவில்களை தரிசிக்க வைத்த இடமாகும். இங்கு உள்ள தவசாலையில் மகா சித்தர் மாயாண்டி சுவாமி அவதார நட்சத்திரம் மாசிபூரா டம் நட்சத்திரம் சிறப்பு பூஜை வழிபாடு அன்னதா னம் நடைபெற்றது. முன் னாதாக சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிக்கு பதி னாறு வகையான மூலிகை கள் அபிஷேகம் நடைபெற் றது . கட்டிக் குளம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர் கள் கலந்து கொண்டு வழி பாடு செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடம் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி வழிபாட்டு குழுவினர் செய்து இருந்தனர்.

## பரிசுகளை குவித்த மாணவர்கள்




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் முத்தமிழ் வேத திருச்சபையின் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களையும் , சிறப்பாக பயிற்சி அளித்த ஆசிரியர்களையும் போட்டிகளை நடத்திய முத்தமிழ் வேத திருசபையின் துணை செயலர்கள் ஆதி ரெத்தினதிம், மகாலிங்க மூர்த்தி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் ஆகியோர் பாராட்டினார்கள்.

## செங்கரைப்பாளையத்தில் ஆழ்குழாய் கிணறு மோட்டார் உடனடியாக சரி செய்யப்பட்டது



**ஈரோடு, மார்ச் 15:** ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சி செங்கரைப்பாளையம் வெள்ளிமலைப்பாறை அண்ணமார் கோவில் அருகே உள்ள ஆழ்குழாய்க்கிணறு மோட்டார்ரிப்பேர் ஆகிவிட்டது. குளூர் ஊராட்சி செயலருக்கு தகவல் கொடுத்தோம். அவர் மொடக்குறிச்சி BDO அவர்களைத் தொடர்பு கொண்டு எங்கள் ஆழ்குழாய் கிணற்றுக்கு புதிய மோட்டார் பொருத்தித்தர கேட்டுக்கொண்டார். உடனடியாக 13.03.2026 வெள்ளிக்கிழமை மோட்டார் மாற்றுவதற்கு போர்வெல் பைப் இழுக்கும் வண்டியை அனுப்பி உள்ளார்கள். எங்கள் கோரிக்கை ஏற்று விரைவாக மோட்டார் மாற்றித்தர ஏற்பாடு செய்துள்ள மொடக்குறிச்சி BDO திரு திருநாவுக்கரசு அவர்களுக்கும், குளூர் ஊராட்சி செயலர் திரு ரமேஷ் அவர்களுக்கும் செங்கரைப்பாளையம் ஊர் பொதுமக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி! வணக்கம்!

வாழ்க வளமுடன்

## மானாமதுரை எம்.ஏ.கே கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் சர்வதேச இணைய வழி மாநாடு



**மானாமதுரை , மார்ச் 15:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வேதியேரேந்தல் விலக்கு அருகே உள்ள எம்,ஏ,கே, கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் எம்.ஏ.கே ராஜகோபாலன் அய்யா அவர்களின் வழிகாட்டலில் இணைய வழி பண்ணாட்டு மாநாடு நேற்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் இரா. நாகேஸ்வரி தலைமையுரை மாற்றினார் .சர்வதேச மாநாடு "ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதுதல் மற்றும் நிதி உதவி பெறுதல் "பற்றிய தலைப்பில் ஒரு நாள் சர்வதேச மாநாடு கணினி அறிவியல் துறை மற்றும் வணிகவியல் துறை சார்பில் நடைபெற்றது. மாணவி நூருல் இக்ஷானா வரவேற்புரையாற்றினார்

கர்நாடகா, வி.எம்.கே.எஸ். ஆர். வாஸ்திராட் கலை, அறிவியல் மற்றும் வி.எஸ்.பெல்லிஹால் வணிகக் கல்லூரியை சார்ந்த டாக்டர் மகேஷ் மதார், இயற்பியல் துறை உதவி பேராசிரியர் "பொருத்தமான நிதி நிறுவனங்களைத் தேடுவது எப்படி" என்ற தலைப்பில் பேசினார. அவர் அரசு மானியங்கள், தனியார் நிதியுதவிகள் மற்றும் விண்ணப்பிக்கும் ஆவணங்களைப் பற்றி விளக்கினார்.

தைவான் நாட்டை சேர்ந்த தேசிய சூன் யாட்-சென் பல்கலைக்கழக வேதியியல் துறை, முனைவர் பட்டமேலாய்வாளர், டாக்டர் ஏ.பாலமுருகன், "ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவது எப்படி" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தனது உரையில் கட்டுரையின் அமைப்பு, தரம், கண்ணோட்டம் மற்றும் வெளியீட்டு வழிகளை விவரித்தார்.

திருச்சி, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (சுயாட்சி), கல்லூரியின் இயற்பியல் ஆராய்ச்சித் துறை உதவி பேராசிரியர் டாக்டர் ஆர்.நிர்மல் குமார், "ஆராய்ச்சி அறிக்கை தயார் எப்படி "என்ற தலைப்பில் பேசினார். அவர் நிதி ஒதுக்கீடு எப்படி செய்வது என்பதை பற்றியும், அதன் அம்சங்கள், நிதி கோரிக்கை மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகளை விளக்கினார். இந்த இணையவழி சர்வதேச மாநாடு ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு தேவையான முக்கியத் தகவல்களை வழங்கியது.

நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள்,ஆராய்ச்சி மாணவிகள் மற்றும் சர்வதேச மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.மாணவி தக்ஸின் சபிபா நன்றியுரை கூறினார்.

நிகழ்வு ஏற்பாடுகளை கணினி அறிவியல் துறையின் உதவி பேராசிரியர் மற்றும் மாநாட்டு அமைப்பாளர் திருமதி.சையத் பர்வின் செய்திருந்தார் .நாட்டுபண்ணுடன் ஒரு நாள் சர்வதேச மாநாடு நிறைவடைந்து

## அமெரிக்கா -ஈரான் இடையே ஏற்பட்டுள்ள போர் பதற்றம் குறைந்து அமைதி நிலவ வேண்டி மதுரை மகாபெரியவா கோவிலில் சிறப்பு பிரார்த்தனை




**மதுரை மார்ச் 15:** மேற்காசிய நாடுகளில் அமெரிக்கா -ஈரான் இடையே போர் நடைப்பெறுவதால் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகி உள்ளது. பல்லாயிரக்கணக் கானோர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ந்து போர் நிலவிவருவதால் உலக நாடுகள் பதற்றமடைந்து வருகிறது.

குறிப்பாக இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பெட்ரோலிய பொருட்கள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்கா -ஈரான் உலக அமைதி வேண்டி மதுரை எஸ். எஸ்.காலனி பகுதியில் உள்ள ஸ்ரீ மகா பெரியவா கோவிலில் அனுஷத்தின் அனுக்கிரகம் சார்பில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

உலக அமைதி வேண்டி மகாபெரியவர் விக்ரகம் மற்றும் வெள்ளிப் பாதுகைக்கு மலர்களால் சிறப்பு அர்ச்சனை நடைப்பெற்றது.

இதை தொடர்ந்து வேண்டாம் போர்... வேண்டும் அமைதி என்ற பிளக்ஸ் பிடித்து. சமையல் எரிவாயு சிலிண்டர் வைத்து அகல் விளக்கேந்தி பிரார்த்தனை செய்தனர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக காஞ்சி மடாதிபதி ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் 58வது ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு பூஜை மற்றும் புஷ்பாஞ்சலி நடைபெற்றது.

## காதலனுக்கு கொடுத்த நகைகளை திருப்பி கேட்டதால் தாயை கொல்ல முயன்ற கல்லூரி மாணவி கைது



**நாகர்கோவில், மார்ச் 15:** நாகர்கோவில் பிள்ளையார் புரம் அன்னம் வலை கம்பெனி தெரு பகுதியை சேர்ந்தவர் சுந்தர்ராஜ். அவரது மனைவி கலாவதி. இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் நர்சிங் கல்லூரியிலும், இரண்டாவது மகள் சுருதி (வயது 19) நாகர்கோவிலில் உள்ள கல்லூரியில் பி.காம். முதலாம் ஆண்டும் படித்து வருகிறார்.

மாணவி சுருதி, தனது கல்லூரியில் தன்னுடன் படிக்கும் திங்கள்சந்தை அருகே உள்ள மேற்கு நெய்யூர் பகுதியை சேர்ந்த அபிலாஷ் (19) என்ற மாணவரை காதலித்துள்ளார். இந்தநிலையில் கலாவதி வைத்திருந்த 10 பவுன் நகைகள் மாயமானது.

இதுகுறித்து சுருதியிடம் கேட்டபோது, தன்னுடன் படிக்கும் அபிலாஷ் அவசர தேவைக்காக பணம் கேட்டதால், நகைகளை கொடுத்ததாக கூறியிருக்கிறார். அதனைக்கேட்டு அதிர்ச்சியடைந்த கலாவதி, நகைகளை திருப்பி வாங்கித் தருமாறு கேட்டு மகளிடம் தகராறு செய்தார்.

அவர் நகையை திருப்பி வாங்கித்தராததால் தாய்-மகளுக்கிடையே தினமும் தகராறு நடந்து வந்திருக்கிறது. இதற்கிடையே சுருதியின் வீட்டுக்கு அபிலாஷ் நேற்று வந்தார். அவரிடம் கலாவதி, நகைகள் எங்கே? என்று நேரடியாக கேட்டிருக்கிறார்.

அதில் ஆத்திரமடைந்த அபிலாஷ், உருட்டு கட்டையால் கலாவதியின் பின் தலையில் தாக்கினார். இதில் நிலைகுலைந்த அவர் சுருண்டு கீழே விழுந்தார். இதையடுத்து அபிலாஷ் மற்றும் சுருதி ஆகிய இருவரும் சேர்ந்து சுடிதார் துப்பட்டாவால் கழுத்தை இறுக்கி கலாவதியை கொல்ல முயன்றனர்.

அதே நேரத்தில் கலாவதியின் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர்.

அப்போது சுருதி தனது காதலனுடன் சேர்ந்து தாய் கலாவதியை கொல்ல முயற்சி செய்து கொண்டிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

உயிருக்கு போராடி கொண்டிருந்த அவரை உடனே அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு கலாவதிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து சுசீந்திரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் அபிலாஸ் மற்றும் சுருதி ஆகிய இருவரின் மீதும் சுசீந்திரம் போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிந்து கைது செய்தனர். விசாரணைக்கு பின் இருவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். சுருதி தக்கலை கிளை சிறையிலும், அபிலாஷ் நாகர்கோவில் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

## சிலிண்டர்கள் பதுக்கி வைத்து விற்பனை: திருப்பூரில் கியாஸ் நிறுவனத்துக்கு 'சீல்'



**திருப்பூர், மார்ச் 15:** ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகள் நடத்தி வரும் போர் காரணமாக இந்தியா முழுவதும் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகம் முடங்கியுள்ளது. திருப்பூரில் வர்த்தக கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில் உணவுப்பண்டங்கள் தயாரிப்பை குறைத்துவிட்டனர். சில ஓட்டல்கள் மூடப்பட்டுவிட்டன.

வீட்டு உபயோக சிலிண்டர்களை முன்பதிவு செய்ய தனியார் கியாஸ் நிறுவனங்களில் கூட்டம் அதிகரித்து வருகிறது. இந்த தட்டுப்பாட்டை காரணம் காட்டி, கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதாக தொடர்ந்து புகார் எழுந்து வருகிறது.

இவ்வாறு கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்தால் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுவர் என்று எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே உத்தரவின் பேரில், மாவட்ட வழங்கல் அதிகாரி தலைமையிலான குழுவினர் தனியார் கியாஸ் நிறுவனங்கள் மற்றும் குடோன்களில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். வீரபாண்டி வாய்க்கால்மேடு பாரியூர் அம்மன் நகரில் உள்ள தனியார் கியாஸ் நிறுவனத்தில் சிலிண்டர்கள் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாக நல்லூர் நுகர்வோர் நல மன்றம் சார்பில் மாவட்ட வழங்கல் அதிகாரியிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட தனியார் கியாஸ் நிறுவனத்தில் மாவட்ட வழங்கல் அதிகாரி சரவணன் சென்று ஆய்வு செய்தார். ஆனால் அந்த நிறுவனம் மூடப்பட்டு இருந்தது.

சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளரிடம் செல்போனில், அதிகாரி தொடர்பு கொண்டதற்கு அவர் சரிவர பதில் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. பின்னர் சம்பந்தப்பட்ட கட்டிடத்துக்குள் கியாஸ் சிலிண்டர்கள் இருக்க வாய்ப்பு உள்ளதால் அந்த கட்டிடத்தை, மாவட்ட வழங்கல் அதிகாரி பூட்டி 'சீல்' வைத்து நடவடிக்கைமேற்கொண்டார். மேலும் சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளர் நேரில் வந்து விளக்கம் அளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சசிகலா புதிய கட்சி தொடங்கியுள்ளதை வரவேற்கிறேன் - சீமான்



**திருச்சி, மார்ச் 15:** திருச்சி விமான நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் கடந்த 15 நாட்களுக்குள் பல்வேறு கொலைகள் மற்றும் பாலியல் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளது. ஆறு வயது குழந்தையிலிருந்து 60 வயது முதியவர்களுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இது போன்ற தொடர் குற்றச்செயல்கள் அதிகரிப்பு சமூகத்தின் ஒழுக்க சீர்கேட்டிற்கு காரணமாகிறது.

குற்றங்களில் ஈடுபடுபவர் களில் பெரும்பாலானோர் மதுபோதையில் உள்ளது கவலைக்குரியது. இதை தடுப்பதற்கு அரசுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கும் பொறுப்புள்ளது. மேலும், சாதி அரசியலாக மாறினால் சமத்துவம் அழியும், மதம் அரசியலாக மாறினால் மனிதம் அழியும், பணம் அரசியலாக மாறினால் பண்பாடு மற்றும் ஒழுக்கம் அழியும். நல்ல ஒழுக்கம் மற்றும் அறநெறி கொண்ட சமூகத்தை உருவாக்க அனைவரும் உறுதி எடுக்க வேண்டும்.

சசிகலா புதிய கட்சி தொடங்கியுள்ளதை வரவேற்கிறேன். அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைவரும் கட்சி தொடங்குகிறார்கள். அவர் மாற்றத்தை கொண்டு வர வாழ்த்துகிறேன்.

தி.மு.க. தனியார் மயத்திற்கு எதிராக போராட்டம் நடத்துகிறது. நாட்டின் பொருளாதார கொள்கையே தனியார் மயத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது. கல்வி, மருத்துவம், போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகள் ஏற்கனவே தனியார் மயமாகி விட்டது.தமிழக அரசியலில் இன்னும் எந்த கூட்டணியும் முடிவாகவில்லை. எங்கள் கட்சி முன்கூட்டியே மக்களிடம் சென்று அரசியல் நிலைப்பாடுகளை விளக்கி வருகிறது. பெரிய பொருளாதார ஆதாரம் இல்லாததால் மக்களை நேரில் சந்தித்து ஆதரவு பெற முயற்சித்து வருகிறோம். தமிழர் நலனுக்காக நடத்தப்படும் போராட்டங்கள் மக்களிடம் சென்று சேர வேண்டும். அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## அதிமுக பாகமுகவர்கள் ஆலோசனைக்கூட்டம்



**சென்னை, மார்ச் 15:** திருவள்ளூர் மத்திய மாவட்டம் மதுரவாயல் மத்திய மேற்குப் பகுதி அதிமுக கழக சார்பில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பென்ஜமின் தலைமையல் 148 மற்றும்151 வட்டத்தின் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

BUSINESS NEWS DAILY ePAPER SPORTS TRAVEL
START YOUR OWN EPAPER WEBSITE TODAY!
CALL 7789941009

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY WEBSITE RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424

Special Invitation
to retired seniors house wives businessmen bankers
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate
To restart your second Innings with a career business opportunity
♦ Flexible timing unlimited incentive
♦ No target work from home training provided
For successful business.
Contact Mr. Irudaya Raj
Ph.9486634780

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship: Clinical Training, Counseling Practice, Case Work
Jobs: Social Worker, Jr Psychologist, Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact: 8428872887

WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri ManjalMart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டைவப்ர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!




மின்னல் கீற்றாய்
இதயத்தை தாக்கி
புயலாய் மனம் புகுந்து
திமிராய் குடிக்கொண்டாய்
என் இதயம் பறித்தாய்
கல்நெஞ்சக்காரா

அலைப்போல்
துள்ளி எழுந்து
பனிப் போல்
உருகுதே எனதுள்ளம்
உனை கண்டதும்

தேடிக்கிடைத்தால்
என்ன செய்வது
எனவே நீ யென்
தெவிட்டாத தேடலாகவே
இருந்துவிடு

# வாழ்க்கை தத்துவம்...



நமக்கு வேண்டியது எதுவும்
நம்மள விட்டு போகாது
நம்மள விட்டு போய்ருச்சுனா
அது நமக்கானது இல்ல

இருக்கது ஒரு வாழ்க்கை
அத ஊருக்காகவும்
உறவுக்காகவும் வாழாம
நமக்காக வாழனும்
நமக்கு பிடிச்ச மாதிரி

எல்லாருக்கும் பிடிச்ச
மாதிரி வாழ முடியாது
யாருக்கும் பிடிக்கலேனும்
சாக முடியாது

முகத்தை மூடினாலும்
மனதைத் திறந்து வை
நல்லெண்ணெம் நுழைவதற்கு

# உலக உருண்டை ...

கடந்த ஐந்தாறு நாட்களாக வீட்டில் ஒரே பிரச்சனை... நான் வேலைக்கு கிளம்புகிற ஒவ்வொரு நாளும் என் மனைவி சொல்லி அனுப்புகிறாள் வரும்போது ஒரு கரண்ட் அடுப்பு வாங்கி வாங்க என்று, ஆனாலும் நான் வேலை பிசியில் மறந்து தான் வந்து கொண்டிருக்கி றேன்அப்படி மறந்து விட்டு வருகின்ற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அர்ச்சனைகள் நடந்து கொண்டே இருக்கிறது வீட்டில்,

"இங்க பாருங்க கராரா சொல்லிட்டேன் இன்னைக்கு மட்டும் கரண்ட் அடுப்பு இல்லாம வீட்டுக்குள்ள வந்தீங்கன்னா கதவை சாத்தி புடுவேன் ஆமா சொல்லிட்டேன்... வாங்காம வந்து நின்னுட்டு மறந்துட்டேன் கிறந்துட்டேன்னு சொன்னக்கா நல்லா இருக்காது பாத்துக்கோங்க"

என்றபடி டிபன்பாக்ஸை கையில் திணித்த படி ஏதோ போருக்கு புறப்படுவதைப் போல என்னை மிகவும் நெருப்புப்பார்வையில் சுட்டேரித்தாள் என் மனைவி. இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்ற கரண்ட் அடுப்பெல்லாம் இப்போது ஐந்தாயிரம்,ஆறாயிரம் என்று சொல்கிறார்கள் என் மனைவிக்கு இதை எப்படி சொல்லி புரிய வைப்பேன்...? நான் வாங்குகிற இருந்துஆயிரம் ரூபாய் சம்பளத்தில் கரண்ட் அடுப்பு மட்டும் ஐந்தாயிரம் ஆறாயிரம் என்று சொன்னால், இந்த மாதத்தை எப்படி சமாளிப்பது என்று குழப்பமாய் இருந்தது எனக்கு.

அன்று மாலை வீடு திரும்பும் போது கரண்ட் அடுப்போடு வீட்டுக்குள் நுழைந்தேன்... என் மனைவிக்கு ஏக சந்தோசம், கரண்ட் அடுப்பு வாங்கி அடுப்பை மேடையில் வைத்த அவள் அடுத்த வினாடி " இந்த பாழாப்போன சிலிண்டர் உருளையையெல்லாம் தெருவில் தூக்கி வீசுங்க" என்று கோபமாக கொக்கரித்தாள்.

"சரி.... சரி...அதான் கரண்ட் அடுப்பு வாங்கி வந்தாச்சுல்ல இருக்கிற அடுப்பை வச்சு சமாளி, அதுக்குள்ள சிலிண்டர் பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்துடும். தாராளமா சிலிண்டர் கிடைக்க ஆரம்பித்து விடும்" என்று என் மனைவியை நான் தேற்றினேன். "நாசமா போற இந்த சிலிண்டர் காரணங்களுக்கு என்ன தான் நோவு வந்துச்சு...?ஏன் இப்படி பண்றாங்க இத்தனை நாளா ஒழுங்காதானே குடுத்துக்கிட்டு இருந்தாங்க அப்படி இருக்கும்போது இப்போ மட்டும் சிலிண்டர் இல்லைன்னு ஏன் சொல்றாங்க...? என்று தன்னைத்தானே புலம்பி கொண்டு தலையில் அடித்துக் கொண்டால் என் மனைவி.

சாதாரணமாக வீட்டு சிலிண்டர்கள் தொள்ளாயிரத்துஇருபது ரூபாய்க்கு கொடுப்பார்கள் ஆனால் இன்று அதை ஆயிரத்து ஐநூறு,வரையென்று தங்களுடைய சுய லாபங்களை பெருக்கிக் கொள்வதற்காக முயற்சி செய்கிறார்கள் சிறு சிறு சிலிண்டர் வணிகர்கள். எந்த நாட்டில் என்ன நடந்தால் என்ன யார் எப்படி பசியாய் கிடந்தாலென்ன எங்கள் வயிறு நிறைந்தால் போதும் என்கிற இந்த வணிகமும் வணிகம் சார்ந்த உலகமும் பொது ஜனங்களைப் பற்றிய கவலை கொள்கிறதா? என்கிற கேள்வி நம் முன்னே நிற்கிறது. இதை என்ன சொல்வது..?

இன்னமும் வீட்டு சமாச்சாரத்தையே சரியாக புரிந்து கொள்ளாத என் மனைவி, இந்த நாட்டில் இருக்கிற பிரச்சனையை எப்படி புரிந்து கொள்ளப் போகிறாள் என்று வருத்தமாய் இருந்தது எனக்கு. அண்டை நாடுகளில் நடந்து வருகிற பிரச்சனைகள் காரணமாகவே இந்த எரி உருளை பிரச்சினை பூதாகரமாக வெடித்து இருக்கிறது இந்தியாவிலும் கூட என்று. இதை எத்தனை முறை நானும் சொல்லி புரிய வைக்கப்பார்த்துவிட்டேன். என் மனைவிக்கு புரிந்தபாடில்லை அவள் கேட்கிறாள் அடுத்த நாட்டில் பிரச்சனை என்றால் இந்த நாட்டிற்கு என்ன கேடு வந்தது என்று கேட்கிறாள். இவளிடம் உலக பொருளாதாரம் பற்றியெல்லாம் எப்படி விளக்குவதென்றும் எனக்கு புரியவில்லை.

அதை விடவும் இன்னும் ஒருபெரிய கொடுமை நடக்கத்தான் போகிறது எரிஉருளைகள் இல்லாத பிரச்சனையை தீர்ப்பதற்காக கரண்ட் அடுப்புகளை பயன்படுத்துகிற ஒவ்வொரு வீட்டிலும் இனி அடுத்த மாதங்களில் இரண்டு மூன்று மடங்காக கரண்ட் பில் எகிற போகிறது என்பதும் உண்மையிலும் உண்மை அந்தப் பிரச்சனையை எப்படி தீர்க்க போகிறது நம்முடைய ஆளுமைகள் என்று மிகவும் வருத்தமாய் இருந்தது எனக்கு.

அவ்வப்போது வீடுகளில் சமைக்கின்ற சூழல்கள் சரியாக அமையாத பட்சத்தில், எப்போதாவது ஹோட்டல்களுக்கு சென்று சாப்பிடுவது வழக்கம் அல்லது வாங்கி வந்து வீட்டில் சாப்பிடுவது வழக்கம் ஆனால், இப்போது அதற்கும் பிரச்சனை... பெரும்பாலும் ஹோட்டல்கள் தேநீர் விடுதிகள் மூடிக்கிடக்கின்றன இதையெல்லாம் எப்படி சமாளிக்க போகிறோம் என்று நினைக்கும் போது நெஞ்சு பதறுகிறது.

ரொம்பவும் சின்ன சின்ன தேனீர் வியாபாரிகளெல்லாம் கொரோனா காலத்தில் வாழ்ந்த அதே பரிதவிப்பு நிலை இன்றைக்கும் ஏற்பட்டு இருக்கிறது. விறகு அடுப்புகளை பயன்படுத்துகிற களம் ஒளிந்து போய்விட்ட காரணத்தால் இன்று மீண்டும் விறகு அடுப்புகளை பயன்படுத்துவதென்பது ஹோட்டல்களுக்கும் தேநீர் விடுதிகளுக்கும், சிரமமான ஒரு காரியமாக இருந்தது. தேநீர் கடைகளில் விறகு அடுப்புகளை பயன்படுத்தும் போது தேநீரின் சுவையும் ருசியும் குறைந்து போய்விடும் என்பது உண்மை தானே...?
இந்த நிலையில் சாதாரணமாக ஹோட்டல்களுக்கு சென்று நூறு ரூபாய்க்கு சாப்பிட்டு கொண்டு இருந்த காலகட்டத்தில், இன்று இருநூறு ரூபாய் தேவைப்படுகிறது என்பது மிகவும் வெட்கமான கேவலத்திற்குரிய செயல்தானே...?

அண்டை நாடுகளில் குடியும் குடிசைகளும் வெடித்து சிதறுகிற இந்த நேரத்தில், உயிர் பலிகளுக்கு ஆளாகி சொந்தங்களை இழந்து ரத்தங்களோடும்... பஞ்சம் பசி பட்டினிகளோடும்... இருப்பிடங்களை இழந்து சொந்த பந்தங்களை மரணத்தின் பிடிகளில் சிக்க வைத்து விட்டு என்ன செய்வது ... ஏது செய்வதென்றும், ஒன்றும் புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிற அண்டை நாட்டு மக்களின் நிலை மனோநிலையை ஒரு நிமிடம் யோசித்தால் போதும் இந்த உலகம் எதற்காக இயங்கிக் கொண்டிருக்கிறது ஏன் இப்படி அடித்துக் கொண்டு சாகிறது என்கிற எதார்த்தம் புரியும். இந்த எதார்த்தம் என்கிற ஒரு வார்த்தையில் எத்தனை பெரிய சுயநல புழுக்களும், மனிதாபிமானமற்ற செயல்முறைகளும், அன்பை ஏந்தி திரிகிறோம் என்று சொல்லிக்கொண்டு... அநியாயம் செய்து வருகிற முதலாளித்துவ நாடுகளின் கொடுங்கோன்மைத்தனங்களையும் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்த வீடு எப்படி போனால் என்ன தன்னுடைய வீட்டில் அடுப்பு இருந்தால் போதும், என்று நினைக்கின்ற என் மனைவியைப் போன்ற பிறவிகளுக்கு இந்த உலக உருண்டைக்குள் ஏற்பட்டிருக்கிற மனச்சிக்கள்கள் என்பதையும் பொருளாதார சீரழிவு என்பதையும், சொல்லி புரிய வைக்கவே முடியாது என்ன செய்வது சொல்லுங்கள். இந்த ஒவ்வாமை மிகுந்த உண்மையை சொல்லுகிற போது இங்கே அரசியல் பேசாதீர்கள் என்று என்னை மிகவும் சாடுவாள் என் மனைவி என்ன செய்வது இங்கே மனிதன் சாப்பிடுகிற ஒவ்வொரு அரிசியிலும் கூட அரசியல் கலந்திருக்கிறது என்கிற உண்மை என் மனைவி போன்ற பலருக்கு புரியவே இல்லை.

இன்று ஏற்பட்டிருக்கிற இந்த எரி உருளை தட்டுப்பாடு என்பது பார்ப்பதற்கு என்னவோ மிகவும் சாதாரணமாக தான் தெரியும். இதன் விளைவு கரண்ட் அடுப்புகளின் விலை ஏற்றம் பின்பு உணவு பண்டங்களின் விலை ஏற்றமென இன்று மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகவே தெரிகிறது. சுயநலமும் அதிகார சிந்தனைகளும் ஒழியாத வரை இந்த உலகத்தில் பஞ்சமும் மனிதர்களின் நிம்மதியான வாழ்வு என்பதும் கிடைப்பது , அரிதான ஒன்று என்கிற உண்மை மட்டும் நன்றாகவே புரிகிறது. அடக்குமுறை சிந்தனைகளையும் அடிமைப்படுத்துகிற செயல்களையும் மனிதன் நிறுத்தாத வரை இங்கே மனிதன் வாழ்வதென்பது மிகவும் கேள்விக்குறியான ஒன்றே. மனிதன் தன் சுயநலத்திற்காக இந்த பூமி பந்தையே வெடித்து சிதற அடித்து விடுவானோ என்கிற ஐயமும் எழுகிறது. எது எப்படியோ இதுவரை பசியாலும் பட்டினியாலும் புகைந்து கொண்டு இருந்த அவனவனின் வயிறுகள் அடங்கிய அடுப்படிகள் கூட இன்று எரிவதை தவிர்த்து புகய ஆரம்பித்துவிட்டது. என்பதை எண்ணுகிற போது கண்களில் கண்ணீர் அல்ல ரத்தம் கசிய தொடங்குகிறது.

**முத்தையா மோகன்**
கோயம்புத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஒருத்தர் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போயிட்டு போயிட்டு வறாரு ஏன்.?*

*விடை: ஏன்னா டாக்டர் தான் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக் பண்ணிக்க சொன்னாராம்.*

*ஒரு கல்யாணத்துல மொய் வைக்க வந்த எல்லாருக்கும் கையில BREAD கொடுத்தாங்கலாம் ஏன்..?*

*விடை: ஏன்னா அந்த கல்யாணம் நல்லா JAM JAM-னு நடந்துச்சாம்.*



# தினம் ஒரு சமையல்



## காளான் பிரியாணி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| காளான் | -300 கிராம் |
| பிரியாணி அரிசி | -500 கிராம் |
| வெங்காயம் | -2 |
| தக்காளி | -4 |
| பச்சை மிளகாய் | -3 |
| இஞ்சி பூண்டு விழுது | -50 கிராம் |
| கொத்தமல்லி | -1 கை |
| புதினா | -1 கை |
| தயிர் | -100 மில்லி |
| மஞ்சள் தூள் | -½ தேக்கரண்டி |
| மிளகாய் தூள் | -1 தேக்கரண்டி |
| கரம் மசாலா | -1 தேக்கரண்டி |
| பட்டை கிராம்பு ஏலக்காய் பொடி | -½ தேக்கரண்டி |
| எண்ணெய் | -100 மில்லி |
| நெய் | -20 கிராம் |

செய்முறை:



முதலில் காளனயும், அரிசியும் கழுவி சுத்தம் செய்து வைக்கவும். பிறகு குக்கரில் எண்ணெய்,நெய் ஊற்றி காய்ந்ததும் அதில் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து நன்றாக வதக்கவும்.பின்பு அதில் பட்டை கிராம்பு ஏலக்காய் சேர்க்கவும்.

பின்பு அதில் வெங்காயம் சேர்த்து வதக்கவும் அதில் பின்பு மசாலா பொருட்கள் அனைத்தும் சேர்த்து வதக்கவும்.

பிறகு தக்காளியும் சேர்த்து வதக்கி அதில் வெட்டி வைத்த காளான் பின்பு தயிர் சேர்த்து நன்றாக கிளறவும்.

பின்பு காளான் தண்ணீர் விட ஆரம்பித்ததும் அதில் பச்சை மிளகாய் கொத்தமல்லி புதினா தூவி கிளறி அதில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி ஊற வைத்த அரிசியை போட்டு 2 விசில் விட்டு இறக்கவும்.

# வட்டத்துத்தி பயன்கள்



பல வகையான அதிசய உயிர் காக்கும் மூலிகைகள் நிறைந்த நாடாக நமது பாரத தேசம் இருக்கிறது. ஒவ்வொரு வகையான மூலிகை பற்றியும், அதன் மருத்துவ குணங்கள் பற்றியும் நமது சித்தர்கள் கண்டுபிடித்த சித்த மருத்துவ முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன. சில செடி வகைகள் நம் வீட்டிற்கு அருகாமையில் மிகச் சாதாரணமாக முளைத்திருந்தாலும், அது கொண்டிருக்கும் பல அற்புதமான மருத்துவ குணங்கள் என்ன என்பதை நம்மில் பலருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட ஒரு அற்புதமான மூலிகை செடிதான் துத்தி மூலிகை செடியாகும். இந்த துத்தி மூலிகையை பயன்படுத்தி என்னென்ன உடற்பிணிகளை நீக்கலாம் என்பதை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

எண்ணெய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை அதிகம் சாப்பிடுவதாலும், மலச்சிக்கல் பிரச்சனை இருந்தாலும் முகத்தில் பருக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிறது முகப்பருக்கள் ஏற்படுவதால் முகத்தின் அழகு கெட்டு விடுகிறது இப்படிப்பட்டவர்கள் துத்தி செடி வேரின் மேல்பட்டையை நன்றாக அரைத்து, நல்லெண்ணெயில் கலந்து, நன்றாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு முகப்பருக்களின் மீது தடவினால் முகப்பருக்கள் நீங்கி விடும். தவறான உணவுப் பழக்கம், மலச்சிக்கல், நரம்பு தளர்ச்சி மற்றும் உடல் அதிகம் வெப்பமடைவது போன்ற காரணங்களால் இக்காலங்களில் ஆண்கள் பலருக்கு விந்து நீர்த்து போய், உயிரணுக்கள் குறைந்து குழந்தை பாக்கியம் ஏற்படாமல் போகிறது. இப்படிப்பட்ட ஆண்கள் துத்திப் பூக்களை ஒரு கைப்பிடியளவு சேகரித்து, பசும்பாலில் போட்டுக் மிதமான பதத்தில் காய்ச்சி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வந்தால், உடல் வெப்பம் தணிந்து, தாது விருத்தி ஏற்படும். விந்து உற்பத்தி அடர்த்தியாகும்.

மூல நோய் கொண்டவர்கள் அனுபவிக்கின்ற துன்பம் மற்றவர்கள் அனுபவிக்கும் போது மட்டுமே அறிந்து கொள்ள முடியும். மூல நோய்க்கு சிறந்த மூலிகை மருந்தாக துத்தி இருக்கிறது. துத்தி இலைகளை நிழலில் காயவைத்து, பொடி செய்து வைத்துக் கொண்டு, அப்பொடியைக் காலை மாலை இருவேளை ஒரு தேக்கரண்டித் தூளைச் சாப்பிட்டு, சுடு தண்ணீர் குடித்து வந்தால் மூலம், ரத்த மூலம், உள் மூலம், மூலப் புண்கள், மூலக் கடுப்பு மற்றும் நமைச்சல் முதலிய மூலம் சம்பந்தமானஅனைத்து பிணிகளும் அகலும். நோய் முழுவதுமாக தீர சில தினங்கள் இம்மருந்தை சாப்பிட்டு வரவேண்டும்.

# உங்க SMILE இருக்கே.. இளம் நடிகையை மேடையில் வர்ணித்த நடிகர் தனுஷ்



நடிகர் தனுஷ் தமிழ் சினிமாவில் டாப் ஹீரோக்களில் ஒருவர். ஹிந்தியிலும் அவர் படங்கள் நடித்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

ஷூட்டிங்கில் படு பிசியாக இருந்தாலும், தனக்கு நெருக்கமானவர்கள் அழைத்தால், மற்ற படங்களில் விழாக்களிலும் கலந்துகொள்கிறார். அப்படி நேற்று கருணாஸ் மகன் கென் கருணாஸ் இயக்கி இருக்கும் யூத் படவிழாவில் தனுஷ் கலந்துகொண்டார்.

யூத் படத்தில் 3 ஹீரோயின்களில் ஒருவராக அனிஷ்மா அணில்குமார் நடித்து இருக்கிறார். அவர் சிறை படத்தில் ஹீரோயினாக நடித்து புகழ்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



"சிறை படத்தில் நடித்திருந்த நடிகை. உங்க SMILEக்கு நான் பெரிய FAN. உங்களுக்கு அழகிய, அப்பாவித்தனமான, OVERWHELMING சிறப்பு இருக்கிறது. அது உங்கள் முந்தைய படத்திற்க்கு அதிகம் உதவியது."

"சிறை படத்தில் நன்றாக நடித்து இருந்தீர்கள்" என தனுஷ் மேடையில் பேசி இருக்கிறார்.



சினிமா

யாஷிகா வேற லெவல் கவர்ச்சி உடையில் போஸ் கொடுத்து புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. எப்படி இருக்கிறார் என ஸ்டில்களை பாருங்க.

# அஜித் குமாருக்கு பிரம்மாண்ட காரை பரிசாக அளித்த மஹிந்திரா நிறுவனம்.. அந்த காரின் விலை எவ்வளவு தெரியுமா



தமிழ் சினிமாவில் உச்ச நட்சத்திரங்களில் ஒருவராக கொண்டாடப்படுபவர் அஜித் குமார். இவர் நடிப்பில் கடைசியாக வெளிவந்து மாபெரும் வெற்றிபெற்ற திரைப்படம் குட் பேட் அக்லி.

இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து மீண்டும் அஜித்துடன் AK 64 திரைப்படத்திற்காக கைகோர்த்துள்ளார் இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன். இப்படத்தின் முன் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், படப்பிடிப்பு இன்னும் துவங்கவில்லை. இது அஜித் ரசிகர்களுக்கு வருத்தத்தை கொடுத்துள்ளது.

சினிமாவை தாண்டி நடிகர் அஜித் கார் ரேஸில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். மேலும், கார்களின் மீது தனி அன்பை கொண்டுள்ளார்.

இந்த நிலையில், அஜித் குமாருக்கு மஹிந்திரா நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் பிரிவு தலைவர் ஆர்.வேலுசாமி, உலகின் முதல் FORMULA E தீம் எஸ்யூவி காரை பரிசாக அளித்துள்ளார்.

அஜித் குமாரின் கார் ரேஸிங் ஆர்வத்தை பாராட்டி, கௌரவிக்கும் விதமாக, இந்த காரை அவருக்கு அன்பளிப்பாக வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும், இந்த பிரம்மாண்ட காரின் விலை ரூ. 30 லட்சம் என தகவல் தெரிவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 27 நட்சத்திரங்களுக்குரிய திருத்தலங்கள்

நமது ஆன்மீக அன்பர்களின் நலன் கருதி, ஒவ்வொரு நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் உரிய திருத்தலங்களை இங்கே தொகுத்து வழங்குகிறோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆலயங்கள் அனைத்தும், பல யுகங்களின் வரலாற்றுப் பெருமை கொண்டவை. காலப்போக்கில் அழிவுகள் ஏற்பட்டாலும்,அவை தன்னையே புதுப்பித்துக் கொண்டு இன்றும் சக்தி நிறைந்த தலங்களாக விளங்குகின்றன. எத்தனையோ மகான்களும், ரிஷிகளும், தேவர்களும் வழிபட்டஇந்த ஆலயங்களில், இன்றைக்கும் வலிமையான ஆன்மீக அதிர்வுகள் நிலவுகின்றன. தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு அருளும், அமைதியும், மனப்பலமும் வழங்குகின்றன.

**வழிபாட்டு வழிமுறை**

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்கள் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய திருத்தலத்தை, அந்த நட்சத்திரம் வரும் தினத்தில், முழு நம்பிக்கையுடன், ஆத்ம சக்தியுடன் வழிபட்டு வாருங்கள். அதன் பிறகு, உங்கள் வாழ்க்கையில் நிச்சயம் ஒரு புதிய வெளிச்சம் பிறக்கும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், சாதாரண நாட்களிலும் இந்த ஆலயங்களுக்கு சென்று வழிபட்டால், உங்கள் கஷ்டங்கள் பெருமளவு குறையும்.

**27 நட்சத்திரங்களும் திருத்தலங்களும்**

**1.அஸ்வினி**
அருள்மிகு இறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவாரூரிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி. பஸ் ஸ்டாண்டிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் கோயில் உள்ளது.

**2.பரணி**
அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து 15 கி.மீ. தூரத்தில், காரைக்கால் செல்லும் சாலையில் உள்ள நல்லாடை கிராமம்.

**3.கார்த்திகை**
அருள்மிகு காஞ்சீசுவரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் செல்லும் வழியில் 8 கி.மீ. தூரத்தில் கருஞ்சாநகரம். மெயின் ரோட்டிலிருந்து அரை கி.மீ.

**4.ரோகிணி**
அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில் எதிரே.

**5. மிருகசீரிடம்**
அருள்மிகு ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் 50 கி.மீ., முகாந்தனூர் அருகில்.

**6.திருவாதிரை**
அருள்மிகு அய்யா வரதீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து 70 கி.மீ., அதிராம்பட்டினம் அருகில்.

**7.புனர்பூசம்**
அருள்மிகு அதீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
வேலூரிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் வழியில் வாணியம்பாடி அருகில்.

**8.பூசம்**
அருள்மிகு அசயபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
பட்டுக்கோட்டையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் கிழக்கு கடற்கரைச் சாலை வழியில்.

**9.ஆயில்யம்**
அருள்மிகு கற்கடேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணத்திலிருந்து சூரியனார் கோவில் செல்லும் சாலையில் திருவிசநல்லூர் அருகில்.

**10. மகம்**
அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திண்டுக்கல்லிலிருந்து நத்தம் செல்லும் சாலையில் விராப்பட்டி அருகில்.

**11.பூரம்**
அருள்மிகு ஸ்ரீஹரி தீர்த்தேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
புதுக்கோட்டையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் வழியில் 7 கி.மீ. தூரத்தில் உள்ள திருவரங்கம் கிராமத்தில் ஆலயம் அமைந்துள்ளது.

**12. உத்திரம்**
அருள்மிகு மாங்கல்யேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருச்சி சத்திரம் பஸ் ஸ்டாண்டிலிருந்து 22 கி.மீ. தூரத்தில் உள்ள லால்குடி, அங்கிருந்து 5 கி.மீ. தூரத்தில் இடையாற்று மங்கலம் கிராமம்.

**13.ஹஸ்தம்**
அருள்மிகு கிருபா கூபரேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் வழியில் குத்தனல்லூர் அருகே, அங்கிருந்து பிரியும் சாலையில் 8 கி.மீ. தூரத்தில் கோமல் கிராமம். பஸ், ஆட்டோ வசதி உண்டு.

**14. சித்திரை**
அருள்மிகு சித்திரரத வல்லபெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**



மதுரையிலிருந்து 23 கி.மீ. தூரத்தில் உள்ள குருவித்துறை. அங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் கோயில். வியாழன், பௌர்ணமி தினங்களில் பேருந்து வசதி உள்ளது.

**15.சுவாதி**
அருள்மிகு தாத்ரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சென்னையிலிருந்து பூந்தமல்லி வழியாக தண்ணீரை செல்லும் பாதையில் 8 கி.மீ. தூரத்தில் சித்துக்கோடு கிராமம். குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே பேருந்து வசதி.

**16. விசாகம்**
அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்
**இருப்பிடம்:**
மதுரையிலிருந்து 155 கி.மீ. தூரத்தில் உள்ள செங்கோட்டை, அங்கிருந்து 7 கி.மீ. தூரத்தில் திருமலைக்கோவில். பேருந்து மற்றும் வேன் வசதி உள்ளது.

**17. அனுஷம்**
அருள்மிகு மகாலட்சுமிபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
மயிலாடுதுறையிலிருந்து சீர்காழி செல்லும் வழியில் 7 கி.மீ. தூரத்தில் உள்ள திருநின்றியூர்.

**18. கேட்டை**
அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 13 கி.மீ. தூரத்தில் உள்ள பசுபதி கோயில் பஸ் ஸ்டாப்பிற்கு அருகில்.

**19. மூலம்**
அருள்மிகு சிங்கீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சென்னை கோயம்பேட்டிலிருந்து பேரம்பாக்கம் வழியாக 45 கி.மீ. தூரத்தில் மப்பேடு கிராமம்.

**20. பூராடம்**
அருள்மிகு ஆகாசபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
தஞ்சாவூரிலிருந்து திருவையாறு சென்று, அங்கிருந்து கல்லணை செல்லும் வழியில் 4 கி.மீ. தூரத்தில் கடுவெளி.

**21. உத்திராடம்**
அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
சிவகங்கையிலிருந்து காரைக்குடி செல்லும் வழியில் 12 கி.மீ. தூரத்தில் ஒக்கூர், அங்கிருந்து 3 கி.மீ. தூரத்தில் பூங்குடி.

**22. திருவோணம்**
பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்
**இருப்பிடம்:**
வேலூரிலிருந்து சென்னை செல்லும் வழியில் 20 கி.மீ. தூரத்தில் உள்ள காவேரிப்பாக்கம், அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் திருப்பாற்கடல்.

**23.அவிட்டம்**
அருள்மிகு பிரம்மஞான புரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
கும்பகோணம் மகாமகக் குளம் மேற்கு கரையிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ள கொடுக்கை கிராமம்.

**24.சதயம்**
அருள்மிகு அக்னிபுரீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவாரூர் மாவட்டம், நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் 10 கி.மீ. தூரத்தில் திருப்புகலூர்.

**25. பூரட்டாதி**
அருள்மிகு திருவானேஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருவையாற்றிலிருந்து 17 கி.மீ. தூரத்தில் திருக்காட்டுப்பள்ளி, அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் ரங்கநாதபுரம்.

**26. உத்திரட்டாதி**
அருள்மிகு சகஸ்ரலட்சுமீஸ்வரர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
புதுக்கோட்டையிலிருந்து ஆவுடையார்கோவில் சென்று, அங்கிருந்து திருப்புவனவாசல் செல்லும் வழியில் 21 கி.மீ. தூரத்தில் தீயத்தூர்.

**27. ரேவதி**
அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்
**இருப்பிடம்:**
திருச்சியிலிருந்து முசிறி சென்று, அங்கிருந்து தாத்தையங்கார் பேட்டை வழியாக 5 கி.மீ. தூரத்தில் காருகுடி கிராமம்.

இந்த 27 நட்சத்திரத் திருத்தலங்கள்,நமது பூர்வ ஜென்ம கர்மங்களைச் சீர்செய்யும் அதீத ஆன்மீக சக்தி கொண்டவை.

உங்கள் ஜென்ம நட்சத்திர நாளில்,இந்த ஆலயங்களில் வழிபாடு செய்தால்,மன அமைதி, தடைகள் நீக்கம், வாழ்க்கை முன்னேற்றம் நிச்சயமாக ஏற்படும்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

# தினம் ஒரு தலைவர்கள் எம்.என்.ராய் வரலாறு

மனபேந்திர நாத் ராய் அல்லது எம். என். ராய் 21 மார்ச்சு 1887 - 26 ஜனவரி 1954) இந்தியா விடுதலை அடைய புரட்சிச் செயல்களில் ஈடுபட்டவர். ஒரு கம்யூனிஸ்ட்டு, போராளி, சிந்தனையாளர், நாத்திகர் என்று இவர் போற்றப்படுகிறார்.

**பிறப்பும் படிப்பும்**

இவரது இயற்பெயர் நரேந்திர நாத் பட்டாச்சாரியா. தந்தை ஒரு புரோகிதர். ராய் மேற்கு வங்கத்தில் ஆர்பிலியா என்னும் ஊரில் பிறந்தார். அவருடைய பள்ளிப்படிப்பு ஆர்பிலியாவில் தொடங்கியது. வங்கத்தொழில்க் கழகத்தில் பொறியியலும் வேதியியலும் கற்றார். சொந்த முயற்சியில் தொடர்ந்து படித்து தம் அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

**தேசிய உணர்ச்சி**

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய தேசிய உணர்ச்சி எங்கும் பரவத்தொடங்கியது. பங்கிம் சந்திர சட்டர்ஜி, விவேகானந்தர் ஆகியோரின் எழுத்துகளைப் படித்து உணர்வு பெற்றார். பிரித்தானிய அரசுக்கு எதிராகப் போராடி இந்தியா விடுதலை பெறவேண்டும் என்று விரும்பினார். ஆயுதப்புரட்சி மூலம் மாற்றம் காணலாம் என்று நம்பினார். இந்தியர்களுக்கு தனி அரசியல் அமைப்பு சட்டம் வேண்டும் என்பதை முதன்முதலாக, 1927 ல் வலியுறுத்தி பேசினார்.



**பொதுவுடைமைக் கட்சி**

மெக்சிக்கோவிலும் இந்தியாவிலும் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கினார். தொழிலாளர் பற்றிய சட்டங்களைப் படித்து அவற்றில் ஆழ்ந்த அறிவு பெற்றார். மெக்சிக்கோவிலிருந்து உருசியாவுக்குச் சென்றார். அங்கு லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோரின் நட்பைப் பெற்றார். 1923இல் கம்யூனிஸ்டுக் கொள்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. இக்கொள்கைத் திட்டத்தில் எம். என். ராயின் கருத்துக்களும் விவாதிக்கப்பட்டன. பின்னர் உஸ்பெகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கும் சென்று பொதுவுடைமைக் கருத்துகளைப் பரப்பினார்.

**தந்தை பெரியாருடன் எம்.என்.ராய்**



லெனின் அவர்களுடன் இரஷ்ய நாட்டில் பணியாற்றித் திரும்பிய இந்திய நாத்திக அறிஞர் எம்.என்.ராய் அவர்களையும் அவரது துணைவியாரையும் 1941 பிப்பிரவரியில் சென்னையில் சென்ட்ரல் தொடர்வண்டி நிலையத்தில் பெரியார் ஈ.வெ.ரா. வரவேற்றபோது எடுத்த படம். இடதுகோடியில் நிற்பவர் முன்னாள் அமைச்சர் எஸ்.முத்தய்யா முதலியார்.
– 'விடுதலை', 26.2.1941

**இந்தியாவுக்குத் திரும்பல்**

1930 டிசம்பரில் இந்தியாவுக்குத் திரும்பினார். ஜவகர்லால் நேரு, சுபாஸ் சந்திர போஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். இந்தியாவில் காங்கிரஸ் கட்சியில் சேர விரும்பினார். இருப்பினும் காந்தியடிகளின் தலைமையை அவர் விரும்பவில்லை. பம்பாயில் கைதாகி சிறைக்குச் சென்றார். இன்டிபெண்டெண்ட் இந்தியா என்னும் இதழை நடத்தினார். ஏஐடியூசி என்னும் தொழிற்சங்கத்திற்குப் புத்துயிர் கொடுத்துத் தொடங்கி வைத்தார். ஆனால் பிற்காலத்தில் முதலாளிய சனநாயகத்தையும் கம்யூனிசத்தையும் வெறுத்து ஒதுங்கினார். புரட்சிகர மனிதநேயம் என்ற கொள்கைக்காக தம் இறுதிக் காலத்தில் பாடுபட்டார். 1954இல் டேராடூனில் இறந்தார்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை ஞாயிற்றுக்கிழமை 15.03.2026

# பருப்பு வகைகள் சாகுபடிக்கு உச்ச நீதிமன்றம் வலியுறுத்தல்



புதுடெல்லி, மார்ச் 15:

கிசான் மகா பஞ்சாயத்து அமைப்பு தாக்கல் செய்த ஒரு மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.

பின்னர் உச்ச நீதிமன்ற அமர்வு கூறியதாவது: இப்போது கோதுமை மட்டுமே ஒரே விருப்பமாக இல்லை. கோதுமை மற்றும் அரிசியிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய நேரம் இது. வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் கோதுமை மற்றும் நெல்லுக்கு ஏற்ற மாற்றுப் பொருளாகவும், தென் பிராந்தியங்களில் பிற பயிர்களுக்கு மாற்றாகவும் பயறு வகைகளை முன்னிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பருப்பு வகைகள் சாகுபடிக்கு விவசாயிகள் மாறுவதை ஊக்குவிக்க, வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பல்வேறு துறைகளும் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் புரிதலுடன் பணியாற்ற வேண்டும். குறைந்தபட்ச ஆதரவு விலை மூலம் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

# 100 நாள் வேலைத் திட்டம்: தமிழகத்துக்கு ரூ.729.88 கோடி நிலுவை – மத்திய அரசு



புதுடெல்லி, மார்ச் 15:

தேசிய மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் (100 வேலைத் திட்டம்) கீழ், மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய ரூ.9,300 கோடியை மத்திய அரசு நிலுவையில் வைத்துள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு ரூ.729.88 கோடி நிலுவையில் உள்ளது.

இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் கம்லேஷ் பாஸ்வான் வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில்:

நிகழ் நிதியாண்டில் பிப்.9-ஆம் தேதி வரையிலான நிலவரப்படி, 100 வேலைத் திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அளிக்க வேண்டிய ரூ.9,308.67 கோடி நிலுவையில் உள்ளது.

அதிகபட்சமாக உத்தர பிரதேசத்துக்கு ரூ.1,158.71 கோடி நிலுவையில் உள்ளது. இதைத்தொடர்ந்து ஆந்திரத்துக்கு ரூ.1,014.60 கோடி, கர்நாடகத்துக்கு ரூ.746.65 கோடி, தமிழ்நாட்டுக்கு ரூ.729.88 கோடி, மத்திய பிரதேசத்துக்கு ரூ.704.64 கோடி நிலுவையில் உள்ளது.


இந்தத் திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையை, புதிதாக தொடங்கும் ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்தில் மத்திய அரசு விடுவிக்கிறது.

நிகழ் நிதியாண்டில் பிப்.8-ஆம் தேதி நிலவரப்படி, இந்தத் திட்டத்தின் கீழ், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்கெனவே ரூ.78,004.59 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. இதில் ஊதியத்துக்காக ரூ.64,789.49 கோடி, நிர்வாக உபகரணங்கள் உள்ளிட்டவற்றுக்காக ரூ.13,215.10 கோடி அடங்கும் என்று தெரிவித்தார்.

# தொழிலதிபர் அனில் அம்பானியின் ரூ.581 கோடி சொத்துகள் முடக்கம்

புதுடெல்லி, மார்ச் 15:

தொழிலதிபர் அனில் அம்பானிக்கு சொந்தமான ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் நிறுவனம் (ஆர்எச்எப்எல்), ரிலையன்ஸ் வர்த்தக நிதி நிறுவனம் (ஆர்சிஎப்எல்) ஆகியவை ரூ.11,000 கோடிக்கு மேல் கடன் பெற்று திருப்பிச் செலுத்தவில்லை என யெஸ் வங்கி, இந்திய யூனியன் வங்கி, மகாராஷ்டிரா வங்கி ஆகியவை புகார் அளித்தன.



இது தொடர்பாக சிபிஐ வழக்குப்பதிவு செய்து விசாரித்தது. அமலாக்கத் துறை கடந்த 6ம் தேதி பல இடங்களில் சோதனை நடத்தியது. இதில் முறைகேடு உறுதியானதை அடுத்து கோவா, கேரளா, கர்நாடகா, பஞ்சாப், தமிழ்நாடு, உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் அனில் அம்பானிக்கு சொந்தமான ரூ.581.65 கோடி மதிப்பிலான நிலங்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது. அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் இந்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் ரூ.16,310 கோடி மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

# டெல்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் கவிதாவுக்கு சிபிஐ மீண்டும் சம்மன்



ஹைதராபாத், மார்ச் 15:

டெல்லி மதுபான ஊழல் வழக்கில் தெலங்கானா முன்னாள் மேலவை உறுப்பினரான கவிதாவுக்கு சிபிஐ அதிகாரிகள் நேற்று சம்மன் வழங்கினர்.


டெல்லி மதுபான ஊழல் வழக்கு தொடர்பாக தெலங்கானா மாநில முன்னாள் முதல்வர் கே.சந்திரசேகர ராவின் மகளும், நிஜாமாபாத் முன்னாள் மேலவை உறுப்பினருமான கவிதாவை சிபிஐ அதிகாரிகள் கைது செய்து டெல்லி திஹார் சிறையில் அடைத்தனர். அங்கு சிபிஐ நீதிமன்றத்தில் அவர் நேரில் விசாரணைக்கு ஆஜரானார்.

சுமார் ரூ.100 கோடி வரை நடந்த ஊழலில் கவிதாவுக்கும் தொடர்பு இருப்பதாக முதலில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னர், இதில் கவிதாவுக்கு எந்தவித தொடர்பும் இல்லை எனக் கூறி, சிபிஐ நீதிமன்றம் அவரை விடுவித்தது. இதைத் தொடர்ந்து தனது தந்தையின் பிஆர்எஸ் கட்சியில் இருந்து வெளியேறி, விரைவில் புதிய கட்சியை தொடங்க உள்ளார் கவிதா.

இதையடுத்து வழக்கில் நிரபராதி என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தனது குடும்பத்தாருடன் சமீபத்தில் திருப்பதி ஏழுமலையானை மலையேறி சென்று தரிசனம் செய்து நேர்த்திக்கடனையும் நிறைவு செய்தார்.

இந்நிலையில், நேற்று ஹைதராபாத்தில் அவரது வீட்டுக்குச் சென்ற சிபிஐ அதிகாரிகள், ஹைதராபாத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதாக கூறி, அதற்கான சம்மனை கவிதாவிடம் வழங்கினர். இது தொடர்பாக தனது வழக்கறிஞர்களை சந்தித்து பேசி, சட்டப்படி இதனை எதிர்கொள்வேன் என்று கவிதா தெரிவித்துள்ளார்

# 5 ஆண்டுகளில் 6,800 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மூடல்: தகவல் தொழில்நுட்பம், சுகாதாரத் துறைகள் கடும் பாதிப்பு




புதுடெல்லி, மார்ச் 15:

இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 6,789 ஸ்டார்ட்-அப் (புத்தாக்க) தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

உலக அளவில் வேகமாக வளரும் ஸ்டார்ட்-அப் தொழில்துறையைக் கொண்ட நாடாக இந்தியா கருதப்பட்டாலும், சந்தை நிலவரம் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக இந்த நிறுவனங்கள் முடங்கின.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு மத்திய வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாத் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில், 'ஜனவரி 31-ஆம் தேதி நிலவரப்படி, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையால் மொத்தம் 2,12,283 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதில் சுமார் 3.2 சதவீத நிறுவனங்கள் மூடப்பட்ட நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

துறை வாரியாக, தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) சேவைத் துறையே மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளது. இத்துறையில் மட்டும் 875 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. கடுமையான போட்டி மற்றும் நிறுவனங்களின் செலவினக் குறைப்பு போன்ற காரணங்களால் இத்துறை கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக, சுகாதாரத் துறையில் 553 நிறுவனங்களும், கல்வித் தொழில்நுட்பத் துறையில் 491 நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

கரோனா பெருந்தொற்று காலத்தில் பெரும் எழுச்சி கண்ட கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள், இயல்புநிலை திரும்பிய பிறகு போதிய முதலீடுகள் கிடைக்காமலும், நீண்டகால முதலீட்டுத் தேவைகளாலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இவை தவிர, உணவு மற்றும் பானங்கள், விவசாயம் மற்றும் சில்லறை வர்த்தகம் சார்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் கணிசமான அளவில் முடங்கியுள்ளன. வளர்ந்துவரும் ஏ.ஐ. மற்றும் பின்டெக் துறைகளிலும்கூட சில நிறுவனங்கள் சரிவைச் சந்தித்துள்ளன.

# உரம் தட்டுப்பாடு இல்லை: நிர்மலா சீதாராமன் பதில்

புதுடெல்லி, மார்ச் 15:

நடப்பு நிதியாண்டில் கூடுத லாக ரூ.2.81 லட்சம் கோடி செலவினத்துக்கு அனுமதி கோரி 2-ம் கட்ட துணை மானியக் கோரிக்கை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீதான விவாதத்தில் பதில் அளித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் சூழல் காரணமாக ஏற்படும் சவால்களை சமாளிக்க, ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் பொருளாதார நிலைத்தன்மை நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது துணை மானிய கோரிக்கை காரணமாக 2025-26 பட்ஜெட் மதிப்பீட்டை தாண்டி செலவினம் அதிகரிக்கவில்லை. நடப்பு நிதியாண்டுக்கான மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் மொத்த செலவை ரூ.50.65 லட்சம் கோடியிலிருந்து, ரூ.49.65 லட்சம் கோடியாக மத்திய அரசு குறைத்துள்ளது. ஜனவரி மாதம் வரை அரசு ரூ.36.90 லட்சம் கோடி செலவு செய்துள்ளது. உரம் மானியத்துக்காக கூடுதலாக ரூ.19,230 கோடியும், பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா மானியத்துக்கு ரூ.23,641 கோடி செலவு செய்ய அனுமதி கோரப்பட் டுள்ளது. பாதுகாப்புத்துறைக்கு ரூ.41,822 கோடி உட்பட இதர செலவுக்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான உரத்தில் பற்றாக்குறை ஏதும் நிலவவில்லை. மானியங்களுக்கு துணை மானியக் கோரிக்கையில் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பதியில் குடோனில் பதுக்கிய 665 காஸ் சிலிண்டர்கள் பறிமுதல்




திருப்பதி, மார்ச் 15:

நாடு முழுவதும் வர்த்தக சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா-ஈரான் போரால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை சரி செய்ய மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.


இந்நிலையில், நேற்று திருப்பதி அடுத்துள்ள திருச்சானூர் - எம்.ஆர் பல்லி சாலையில் ஒரு குடோனில் வர்த்தக சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக சிவில் சப்ளை அதிகாரிகளுக்கு தகவல் வந்தது.

அதன்பேரில் அவர்கள் நேற்று மாலை 7 மணியளவில் அந்த குடோனுக்கு ஆய்வு நடத்த சென்றனர். இவர்களை கண்டதும் பிரம்மா ரெட்டி எனும் உரிமையாளர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பின்னர் அங்கு அதிகாரிகள் சோதனையிட்டு 585 வர்த்தக சிலிண்டர்கள், 80 வீட்டு சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.

பாரத் காஸ் உரிமம் இந்த குடோனுக்கு கடந்த 2019-ல் காலாவதி ஆகி விட்டாலும், தொடர்ந்து அங்கு தனியார் சிலிண்டர் வியாபாரம் ரகசியமாக நடந்து வந்துள்ளது. இங்கிருந்து திருப்பதிக்கு மட்டுமல்லாமல் திருமலைக்கு 'கோ காஸ்' எனும் பெயரில் நிபந்தனைகளை மீறி அனுப்பப்பட்டு வந்துள்ளது.

இந்த குடோனை நடத்தி வந்தவர் முன்னாள் திருப்பதி தேவஸ்தான அறங்காவலரும், திருப்பதி எம்.எல்.ஏவுமான கருணாகர் ரெட்டியின் ஆதரவாளர் என்பது தெரியவந்துள்ளது. இது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

# இந்தியாவில் அவசர கால தேவைக்காக கச்சா எண்ணெய் சேமிக்க பூமிக்கடியில் 3 குகைகள்!



புதுடெல்லி, மார்ச் 15:

அவசர கால தேவைக்கு பயன்படுத்தும் வகையில் பூமிக்கடியில் 3 ரகசிய குகைகளில் மத்திய அரசு கச்சா எண்ணெயை சேமித்து வைத்துள்ளது.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப்படை மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் போர் போன்ற அவசர காலங்களில், திடீர் தேவை ஏற்பட்டாலோ, கச்சா எண்ணெய் சப்ளை செய்யும் நிறுவனங்கள் நிறுத்திக் கொண்டாலோ அவசர தேவைக்கு பல லட்சம் டன்கள் கச்சா எண்ணெயை பூமிக்கடியில் சேமித்து வைக்கும் பணியை மத்திய அரசு பல ஆண்டுகளாக மேற்கொண்டு வந்தது.

ஆந்திராவில் விசாகப்பட்டினம், கர்நாடகாவில் மங்களூரு, படூர் என தென்னிந்தியாவில் 3 இடங்களில் ரூ.4,100 கோடி செலவில் இதற்காக பூமிக்கடியில் குகைகள் அமைக்கப்பட்டன. இவற்றில் மிகப் பழமையானது விசாகப்பட்டினத்தில் உள்ளது. இதனை பெட்ரோலிய இருப்புகளை பராமரிக்கும் இந்திய பொதுத்துறை நிறுவனமான ஐஎஸ்பிஆர் 10 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தியது.

இந்த மூன்று குகைகளும் மொத்தம் 5.33 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயை (40 மில்லியன் பீப்பாய்கள்) வைத்திருக்க முடியும். இது சுமார் 10 நாட்களுக்கு நம் நாட்டின் தேவையை பூர்த்தி செய்யக் கூடியது. வெளிப்புற தாக்குதல்கள் அல்லது ட்ரோன் தாக்குதல்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படாத வகையில் கச்சா எண்ணெயை இங்கு பாதுகாப்பாக சேமித்து வைக்க முடியும்.

பராமரிப்பு செலவும் குறைவாக இருக்கும். பூமிக்கு அடியில் ஆழமாக இடத்தில் சேமிப்பு கிடங்கு இருப்பதால் தீ விபத்து, எண்ணெய்க் கசிவு போன்ற அபாயங்களும் குறைவாக இருக்கும். மத்திய அரசு இந்த இருப்புகளை இன்னும் பயன்படுத்தவில்லை. தேவைப்படும் போது இதை பயன்படுத்தும். மாற்று ஏற்பாடுகளுக்கான கால அவகாசத்தை மத்திய அரசுக்கு இந்த இருப்பு வழங்கும்.

# பிரதமர் மோடி, ஜெய்சங்கருக்கு காங். எம்.பி. சசி தரூர் பாராட்டு

புதுடெல்லி, மார்ச் 15:

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று காங்கிரஸ் எம்.பி சசி தரூர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் போர்ப் பதற்றத்தை தணிக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அந்த வகையில் ஈரான் அதிபருடன் பிரதமர் மோடியும் அமைச்சர் ஜெய்சங்கரும் அமைதிப் பேச்சு நடத்தியது வரவேற்கத்தக்கது. உலக நன்மைக்காக இந்தப் போர் முடிவுக்கு வரவேண்டும். இதுதொடர்பான அமைதிக் குரல் கொடுப்பதில் நாம் முதலாவதாக வழிநடத்த வேண்டும். அமெரிக்காவும் இஸ்ரேலும்தான் முதலில் தாக்குதலை தொடங்கி வைத்தன. புத்தரும் காந்தியும் பிறந்த நமது இந்திய மண், அமைதி, அகிம்சையை மிகப்பெரிய மரபாகக் கொண்டுள்ளது. அந்த மரபில்தான் நாம் நிற்க வேண்டும். இவ்வாறு சசி தரூர் எம்.பி. கூறினார்.

# ஓமனில் ட்ரோன் தாக்குதல் - 2 இந்தியர்கள் உயிரிழப்பு; 10 பேர் காயம்

புதுடெல்லி, மார்ச் 15:

ஓமன் நாட்டின் சோஹர் மாகாணத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் இந்தியர்கள் இருவர் உயிரிழந்ததாகவும், மேலும், 10 இந்தியர்கள் காயமடைந்ததாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய நிகழ்வுகள் குறித்து அமைச்சகங்களுக்கு இடையிலான விளக்கக் கூட்டத்தின்போது பேசிய இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் (வளைகுடா விவகாரங்கள்) அசிம் மகாஜன், "ஓமனில் நடந்த தாக்குதலில் இந்தியர்கள் இருவர் உயிரிழந்தர். அவர்களது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்த 10 இந்தியர்களில் 5 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். மற்ற 5 பேர் மருத்துவமனையில் உள்ளனர். அவர்களது உயிருக்கு ஆபத்தில்லை.

எங்கள் தூதரகம் உள்ளூர் அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது.

அதேபோல, இராக்கில் பாஸ்ரா அருகே மார்ச் 9-ஆம் தேதி தாக்குதலுக்கு உள்ளான சஃபேசியா விஷ்ணு கப்பலில் இருந்த 15 பணியாளர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு தற்போது பாஸ்ராவில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த தாக்குதலில் இறந்த இந்தியரின் உடலை கொண்டு வருவதற்கும், மீட்கப்பட்ட 15 மாலுமிகளை பாதுகாப்பாக திருப்பி அழைத்து வரவும் முயற்சிகள் நடந்து வருகின்றன. எங்கள் குழு பாஸ்ராவில் உள்ளது மற்றும் அனைத்து உதவிகளையும் செய்துவருகிறது" என்று அவர் கூறினார்.

ஈரான் மற்றும் அமெரிக்க - இஸ்ரேல் படைகளுக்கு இடையேயான போர் 14 நாட்களை எட்டியுள்ளது. மோதல் நீடித்து வரும் நிலையில், இந்தப்போர் அதன் அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளது சர்வதேச நாடுகளிடம் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

# ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்களை அனுமதிக்க ஈரான் தூதர் உறுதி!

புதுடெல்லி, மார்ச் 15:

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் மோதல்களுக்கு மத்தியில், 'ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியா செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பான வழித்தடம் வழங்கப்படும்' என்று இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது ஃபத்தாலி உறுதியளித்தார்.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக, இந்தியக் கப்பல்களைப் பாதுகாப்பாகக் கடந்து செல்ல ஈரான் அனுமதிக்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்த இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது ஃபத்தாலி, "ஆம். ஏனெனில் இந்தியாவும் நாங்களும் நண்பர்கள். இதை நீங்கள் எதிர்காலத்தில் காண்பீர்கள். ஏனெனில், நாங்கள் அதை உறுதியாக நம்புகிறோம். ஈரானும் இந்தியாவும் நட்பு நாடுகள் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களுக்குப் பொதுவான நலன்களும், பொதுவான எதிர்காலமும் உள்ளன. இந்திய மக்களின் துன்பம் எங்கள் துன்பமே; அதுபோலவே எங்கள் துன்பமும் இந்திய மக்களின் துன்பமாகும். இந்தக் காரணத்தினால், இந்திய அரசாங்கம் எங்களுக்கு உதவுகிறது; நாங்களும் இந்திய அரசாங்கத்துக்கு உதவ வேண்டும். இந்தியாவில் உள்ள தூதர்களாகிய நாங்கள், இந்தப் பிராந்தியத்தில் எங்களுக்குப் பொதுவான எதிர்காலம் இருப்பதாக நம்புகிறோம். இந்தக் காரணத்தினால், ஈரானின் அனைத்து உயர்மட்ட அதிகாரிகளும், இந்திய அரசாங்கத்துக்குத் தேவையான உதவிகளைச் செய்து வழிவகை செய்யுமாறு இந்தியாவில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு அறிவுறுத்தியுள்ளனர்" என்று அவர் கூறினார்.





# காஸ் நிறுவன பெயரில் மோசடி: ரூ.4 லட்சம் இழந்த பெண்கள்

**மும்பை, மார்ச்.11:** மகாராஷ்டிராவின் கல்யாண்-டோம்பிவ்லி காவல் துணை ஆணையர் சுஹாஸ் ஹேமடே நேற்று கூறியதாவது:

டோம்பிவ்லியில் மகாநகர் காஸ் நிறுவனத்தின் ஊழியர் என்று அறிமுகம் செய்து கொண்ட ஒருவர் கூறியதன் அடிப்படையில் 2 பெண்கள் தங்கள் செல்போனில் அந்த நபர் அனுப்பிய இணைப்பை டவுன்லோடு செய்து பல தகவல்களை பதிவேற்றம் செய்துள்ளனர்.

அதன்பின்னர் அவர்களின் வங்கிக் கணக்கில் இருந்து ரூ.4 லட்சம் எடுக்கப்பட்டு விட்டது. தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்தப் பெண்கள் போலீஸில் புகார் அளித்துள்ளனர். இதுகுறித்து சைபர் கிரைம் போலீஸார் விசாரித்து வருகின்றனர். இவ்வாறு துணை ஆணையர் சுஹாஸ் கூறினார்.

# ரூ.300 கோடி போதைப் பொருள் கடத்தியதாக 10 பேர் கைது: இலங்கை கடற்படை நடவடிக்கை




**ராமேசுவரம், மார்ச்.11:** இந்தியப் பெருங்கடலில் 654 கிலோ போதைப் பொருட்களை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து அந்நாட்டைச் சேர்ந்த சேர்ந்த 10 பேரை கைது செய்தனர்.

இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்குரிய முறையில் பயணித்த ஒரு ஆழ்கடல் மீன்பிடி படகை இலங்கை கடற்படையினர் கண்டறிந்து திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு வந்தனர்.

படகில் இருந்த 478 கிலோ ஐஸ் போதைப் பொருள் மற்றும் 176 கிலோ போதைப்பொருளை கண்டறிந்து பறிமுதல் செய்யப்பட்டன. படகில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 10 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

மேலும் 11 துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு ரூ.300 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த போதைப் பொருட்கள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டன, கடத்தலில் தொடர்புடைய நபர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து இலங்கை கடற்படையினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# மூதாட்டியை கடப்பாரையால் தாக்கி 38 பவுன் நகை துணிகர கொள்ளை



**குன்னம், மார்ச்.15:** பெரம்பலூர் மாவட்டம் மங்களமேடு அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது வாலிகண்டபுரம் கிராமம். இங்குள்ள முஸ்லிம் தெருவைச் சேர்ந்தவர் சையதுகான். இவரது மனைவி தாராபி (வயது 65). வயதான இந்த தம்பதியினர் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறார்கள்.

இந்தநிலையில் நேற்று இரவு அனைவரும் சாப்பிட்டுவிட்டு தூங்க சென்றனர். இதில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மாடி அறையில் தூங்கினர். தாராபி மட்டும் வீட்டின் கீழ் அறையில் தூங்கினார். நள்ளிரவு சுமார் 1.30 மணியளவில் வீட்டின் பின்பக்க சுவர் ஏறிக்குதித்து 4 மர்ம நபர்கள் உள்ளே புகுந்தனர்.

முகமூடி அணிந்திருந்த அவர்கள் தனியாக தூங்கிய தாராபியை தாங்கள் கொண்டு வந்திருந்த கடப்பாரையால் திடீரென்று தாக்கியுள்ளனர். இதனை சற்றும் எதிர்பாராத தாராபி ரத்த வெள்ளத்தில் மயங்கினார். பின்னர் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் தாராபி கழுத்தில் அணிந்திருந்த செயின் மற்றும் வீட்டின் பீரோவில் வைத்திருந்த மொத்தம் 38 பவுன் நகைகளை கொள்ளையடித்து விட்டு தப்பிச்சென்றனர்.

இன்று காலை நீண்ட நேரமாகியும் தாராபி வீட்டை திறந்து வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அவரது கணவர் சையதுகான் மற்றும் உறவினர்கள் கதவை தட்டினர். அப்போதும் திறக்கப்படவில்லை. இதனால் பதட்டம் அடைந்தவர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அங்கு தாராபி ரத்தவெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்.

உடனடியாக இதுகுறித்து மங்களமேடு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் விரைந்து வந்த போலீசார் தாராபியை மீட்டு பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அதன்பின்னரே 38 பவுன் நகைகள் கொள்ளை போனது தெரியவந்தது.

இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள மங்களமேடு போலீசார், அந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி. டி.வி. கேமராவில் பதிவான காட்சிகள் மூலம் முகமூடி கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் அந்த பகுதி பொதுமக்களிடையே பரபரப்பையும், பீதியையும் ஏற்படுத்தி உள்ளது.

# வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள மீனவர்களை மீட்க உதவி எண்கள்: சென்னை மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு




**சென்னை, மார்ச்.15:** ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளில் நிலவி வரும் அசாதாரண போர் சூழல் காரணமாக, ஈரானிலிருந்து தாயகம் திரும்ப முடியாமல் தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் தவித்து வருகின்றனர்.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த 595 பேர் அந்நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் சிக்கியுள்ளனர். தமிழக மீனவர்களை பாதுகாப்பாக மீட்டு தாயகம் அழைத்து வரக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகின்றன.

ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளில் சிக்கியுள்ள சென்னையைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கீழே வழங்கப்பட்டுள்ள அந்தந்த நாட்டு இந்திய தூதரக உதவி எண்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அதன்படி ஈரான் (டெஹ்ரான்) தூதரகத்தை +98 9128109115 (வாட்ஸ்-அப்), +98 9128109109 மற்றும் +98 9128109102 ஆகிய எண்கள் மூலமாகவும், துபாய் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளின் தூதரகத்தை +971 543090571 மற்றும் 800 46342 ஆகிய எண்களிலும், சவுதி அரேபியாவுக்கு (ரியாத் மற்றும் ஜெட்டா) +966 542126748, +966 536209704 ஆகிய வாட்ஸ்-அப் எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் இஸ்ரேல் நாட்டு (டெல் அவீவ்) தூதரகத்துக்கு +972 54 7520711 என்ற எண்ணையும், ஓமனுக்கு (மஸ்கட்) +968 98282270 மற்றும் கத்தாருக்கு (தோஹா) +974 55647502 ஆகிய எண்களையும் தொடர்பு கொண்டு உதவி பெறலாம்.

வெளிநாடுகளில் இருந்து சென்னை அல்லது திருச்சி விமான நிலையம் வழியாக தாயகம் திரும்ப விரும்பும் தமிழர்கள், தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையை தொடர்பு கொள்ளலாம்.

இதற்காக இந்தியாவுக்குள் அழைக்கக் கூடிய கட்டணமில்லா தொலைபேசி எண் +91 1800 309 3793 மற்றும் வாட்ஸ்-அப் எண் +91 9600023645 ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

நேரில் அணுகியும் உதவி பெறலாம்

மேலும், nrtchennai@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும், சென்னை சேப்பாக்கம் எழிலகம் அனெக்ஸ் கட்டிடத்தில் உள்ள 'குடியுரிமை பெறாத தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நல ஆணையரகத்தை' நேரில் அணுகியும் உதவிகளைப் பெறலாம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார். சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் சூழல் காரணமாக சமையல் எண்ணெய் விலை கிடுகிடு உயர்வு



**சென்னை, மார்ச்.15:** ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தொடர் தாக்குதலை அரங்கேற்றி வருகின்றன.

இந்நிலையில் போர் சூழல் காரணமாகசமையல்எண்ணெய் விலையும் 'கிடுகிடு'வென உயர்ந்திருப்பதாக மொத்த வியாபாரி கொளத்தூர் சாலை வியாபாரி முன்னேற்ற சங்க பொருளாளர் அமிர்தராஜ் தெரிவித்தார்.

குறிப்பாக, வீட்டில் பெரும்பாலானோர் பயன்படுத்தக் கூடிய சூரிய காந்தி எண்ணெய் (சன்பிளவர் ஆயில்) முன்பு ஒரு லிட்டர் ரூ.155-க்கு விற்கப்பட்ட சூழலில், இப்போது ரூ.170-க்கு விற்கப்படுகிறது. சில்லரை கடைகளில் இதன் விலை ரூ.175 வரை விற்கப்படுகிறது.

இதேபோல், பாமாயில் கடந்த 2 வாரத்துக்கு முன்பு ஒரு லிட்டர் ரூ.110-க்கு விற்கப்பட்ட சூழலில், இப்போது ரூ.122 வரை மொத்த விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை கடைகளில் இதைவிட லிட்டருக்கு ரூ.5 முதல் ரூ.6 வரை அதிகரித்து விற்கப்பட்டு வருவதை பார்க்க முடிகிறது. அந்தவகையில் சன்பிளவர் மற்றும் பாமாயில் எண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை கடந்த 2 வாரத்தில் மட்டும் உயர்ந்துள்ளது.

இதுதவிர, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றின் விலையும் லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தப்பட்டு விற்கப்படுகிறது.

# எரிபொருள் தட்டுப்பாட்டை தீர்க்க வலியுறுத்தி சென்னையில் ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டம்

**சென்னை, மார்ச்.15:** எரிபொருள், காஸ் தட்டுப்பாட்டை தீர்க்க வலியுறுத்தி ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே நடைபெறும் போரின் காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருள், காஸ் தட்டுப்பாட்டை தீர்க்க வேண்டும்.

தட்டுப்பாட்டை காரணம் காட்டி எரிபொருள் விலையை ஏற்றி விற்கும் நிறுவனங்கள் மீது தமிழக அரசு மற்றும் மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஆட்டோ ஓட்டுநர்கள் நல சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் அண்ணா சாலை தாராப்பூர் டவர்ஸ் அருகே நேற்று நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் சிஐடியு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஆட்டோ ஓட்டுநர்கள் நலச் சங்கத்தின் மாநில செயல் தலைவர் பாலசுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:


எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சென்னையில் 25 ஆயிரம் ஆட்டோக்கள் இயங்க முடியவில்லை.

இன்றைக்கும் அந்த எண்ணிக்கை கூடும், எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் டாக்சி சேவை நிறுவனங்கள் கட்டணங்களை உயர்த்தியுள்ளன. இதனை மத்திய, மாநில அரசுகள் சீர் செய்ய வேண்டும்.

எரிபொருள் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்டது கிடையாது. விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு ஆட்டோக்கள்தான் ஆம்புலன்ஸ். எனவே தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த 7 வயது சிறுவனின் உடல் உறுப்புகள் தானம்- 6 பேர் மறுவாழ்வு பெற்றனர்



**திருப்பூர், மார்ச்.15:** திருப்பூர் மாவட்டம் உடுமலையை சேர்ந்தவர் விக்னேஷ். இவரது மனைவி பிரியதர்ஷினி. இந்த தம்பதிக்கு சிவாதித்யா(7), நிலன் ஆதித்யா என 2 மகன்கள் உள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்தன்று சிவாதித்யா தனது தாத்தாவுடன் காரில் சென்றார். அப்போது கார் கட்டுப்பாட்டை இழந்து அங்குள்ள மரத்தில் மோதி விபத்தில் சிக்கியது. இதில் தாத்தா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சிறுவன் சிவாதித்யா பலத்த காயம் அடைந்தார். அவரை அவரது பெற்றோர் கோவை சூலூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிவாதித்யா, இன்று மூளைச்சாவு அடைந்தார்.

இதுகுறித்து அவரது பெற்றோரிடம் டாக்டர்கள் தெரிவித்தனர். அவர்கள் தங்கள் மகனின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். இதையடுத்து தமிழ்நாடு உறுப்பு தான ஆணைய அனுமதியுடன், சிறுவனின் கண்ணை தவிர மற்ற 6 உடல் உறுப்புகள் எடுக்கப்பட்டு தானமாக பெறப்பட்டன. தானமாக பெறப்பட்ட உடல் உறுப்புகள் ஈரோடு மற்றும் சென்னையில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 7 வயது சிறுவனின் உடல் உறுப்பு தானத்தால் 6 பேர் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

# பொதிகை, நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயில்கள் தாம்பரத்தில் இருந்து புறப்படும்- தெற்கு ரெயில்வே அறிவிப்பு



**சென்னை, மார்ச்.15:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைபெறும் பராமரிப்பு பணி காரணமாக எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது. அதன்படி, எழும்பூரில் இருந்து செங்கோட்டை செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்-12661) வருகிற 17-ந் தேதி முதல் ஏப்ரல் 6-ந் தேதி வரை எழும்பூருக்கு பதிலாக தாம்பரத்தில் இருந்து புறப்படும். அதே போல, நெல்லையில் இருந்து எழும்பூருக்கு வரும் நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயில் (12632) வருகிற 16-ந்தேதி முதல் ஏப்ரல் 5-ந் தேதி வரை எழும்பூருக்கு பதிலாக தாம்பரம் சென்றடையும்.

எழும்பூரில் இருந்து காலை 8 மணிக்கு புறப்பட்டு திருச்சி செல்லும் சோழன் எக்ஸ்பிரஸ் ரெயில் (22675) வருகிற 16-ந்தேதியில் இருந்து ஏப்ரல் 5-ந்தேதி வரை 2.15 நிமிடம் தாமதமாக எழும்பூரில் இருந்து காலை 10.15 மணிக்கு புறப்படும்.

இவ்வாறு அதில் கூறப்படுகிறது.

தென் மாவட்ட மக்களின் வாழ்வாதார ரெயில்களாக கருதப்படும் இந்த ரெயில்கள் திடீரென மாற்றப்பட்டிருப்பது பயணிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை நகரின் மையப்பகுதியில் இருந்து தாம்பரத்திற்கு செல்வதற்குள் கடும் போக்குவரத்து நெரிசலையும், கூடுதல் செலவுகளையும் சந்திக்க நேரிடும் என பயணிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

# மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகள் 47% நிறைவு..! - RTI மூலம் வெளியான தகவல்




**மதுரை, மார்ச்.15:** மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகள் 47 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக. தகவல் அறியும் உரிமை சட்டத்தில் சமூக ஆர்வலர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டு உள்ளது.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள திப்பனம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் பாண்டியராஜா. சமூக ஆர்வலரான இவர் மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகள் குறித்த 8 கேள்விகளை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கேட்டிருந்தார்.

அதன்படி அவர்கள் அளித்த பதில் கடிதத்தில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் மொத்த கட்டுமான பணியின் மதிப்பீடு ரூ.2,021.51 கோடி ஆகும். மத்திய பட்ஜெட்டில் 471 கோடி ரூபாய் நிதி இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

47 சதவீத பணிகள் தற்போது நிறைவடைந்துவிட்டது. வருகிற அக்டோபர் மாதத்தில் எய்ம்ஸ் கட்டுமான பணிகள் முழுவதும் முடிக்கப்படும் என அந்த தகவலில் கூறப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்திலேயே சில முடிவுற்ற பணிகளை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார் என சமூக வலைதளங்களில் செய்தி வெளியான நிலையில் முழுமையாக கட்டுமான பணிகளை முடித்த பின்பு தான் எய்ம்ஸ் மருத்துவமனையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

எனவே கட்டுமான பணிகளை தரத்துடனும், ஜப்பான் நாட்டில் இருந்து வாங்க வேண்டிய நிதியை முறையாக வாங்கி விரைந்து பணிகளை முடித்து திறப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# தமிழகத்தில் அடுத்த 6 நாட்கள் வானிலை எப்படி இருக்கும்?




**சென்னை, மார்ச்.15:** சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

நாளை மற்றும் நாளை மறுநாள் ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

16-ந்தேதி ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 17-ந்தேதி தென் தமிழகம் மற்றும் வடக்கு உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன், கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடக்கு கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

18 மற்றும் 19-ந்தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-25° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-25° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

## வீடு வீடாக நேரில் சென்று வாக்கு சேகரிப்பு, தெருமுனை பிரச்சாரக் கூட்டம்





திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் 14 செங்கம் கிழக்கு ஒன்றியம் மேல் பென்னாத்தூர் ஊராட்சியில் 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தல் வாக்குறுதி பிரசாரங்களை போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வீடு வீடாக நேரடியாக சென்று 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வாக்குறுதி அடைந்த துண்டு பிரசுரங்களை வழங்கினார். தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. உடன் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

## குழந்தைகளின் வளர்ச்சி திட்டத்தின் சார்பாக சமூக வளைகாப்பு விழா



திருவண்ணாமலை மார்ச் 14 கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு அரங்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக நடைபெற்ற மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் சமூக வளைகாப்பு விழாவில் கலந்துகொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ..ஆ. ப.அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.




## தென் மாவட்டங்களில் அ.தி.மு.க. கடும் தோல்வியை சந்திக்கும்- ஓ.பன்னீர்செல்வம்



**கடையநல்லூர், மார்ச்.15:** தி.மு.க.வில் இணைந்த முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சட்டசபை தேர்தல் பிரசாரத்தை தென்காசி மாவட்டத்தில் இருந்து நேற்று தொடங்கினார்.

கடையநல்லூர் அருகே உள்ள அச்சன்புதூரில் நேற்று இரவு நடைபெற்ற தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பங்கேற்று பேசியதாவது:-

தேர்தல் வருகிற போது அரசியல் கட்சிகள் எல்லாம் படையெடுக்கின்றனர் அதிலும் பழனிசாமி என்று ஒருவர் இருக்கிறார். தேர்தல் பிரசாரத்தில் கத்து கத்து என கத்துகிறார். என்ன சொல்லுகிறார் என்பதே புரியவில்லை. அவரின் பேச்சுக்கு மக்களே பதில் சொல்லி விடுவார்கள்.

அவருக்கு ஒன்றே ஒன்று தெரியும், தன்னை ஆளாக்கியவர்களுக்கு துரோகம் செய்வது. அரசியலில் அறிமுகப்படுத்தியவர்களை துரோகம் செய்வது. அவர் ஆட்சியில் நீடிப்பதற்கும் அவரை காப்பாற்றியவருக்கும் துரோகம் செய்வது. முதலமைச்சராக ஊர்ந்து சென்று முதலமைச்சர் பதவியை தந்தவரை எவ்வாறு துரோகம் செய்தார் என்ன சொன்னார் என்பது எல்லாம் உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து அனைத்து தேர்தல்களிலும் தோல்வியைத் தான் சந்தித்து வருகிறார். அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிரந்தர பொதுச்செயலாளர் அம்மா தான் என்ற தீர்மானத்தை தூக்கி போட்டுவிட்டு நான் தான் பொதுச்செயலாளர், நான் தான் முதலமைச்சர் எனக் கூறி எடப்பாடி 10 தேர்தலில் படுதோல்வி அடைந்தது தான் உண்மை. ஒரு தேர்தலிலும் வெற்றி பெறவில்லை.

நிச்சயம் எடப்பாடி ஒரு இயக்கத்தின் தலைவராக இருக்க முடியாது. அனைவருக்கும் சொந்தமான இயக்கமாக இருந்த அண்ணா தி.மு.க.வை தற்போது குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்த கட்சியாக மாற்றி விட்டது அ.தி. மு.க.வுக்கு எடப்பாடி செய்த துரோகம்.

அ.தி.மு.க. கடந்த சட்டமன்ற தேர்தலில் தென் மாவட்டங்களில் 58 சட்டமன்ற தொகுதியில், அம்மா, எம்.ஜி.ஆர். போட்டியிட்ட ஆண்டிப்பட்டி உட்பட 40 தொகுதிகளில் கடுமையான தோல்வியை சந்தித்தது.

உண்மையான அ.தி.மு.க.வின் தொண்டர்கள் எடப்பாடி பழனிசாமியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தென் மாவட்ட மாவட்டங்களில் கடும் தோல்வியை மீண்டும் சந்திக்கும். தி.மு.க.வில் என்னை இணைத்துக் கொண்டதை மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட செயலாளர் செல்லதுரை உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

## “திமுக ஆட்சியை ஓட ஓட விரட்டுவதுதான் எங்கள் வேலை” - சசிகலா பிரகடனம்

**சென்னை, மார்ச்.15:** எம்ஜிஆர் தொண்டர் ஒருவர் தொடங்கிய ‘அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்’ என்ற கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டிருப்பதாக அறிவித்திருக்கும் சசிகலா, தமிழகம், புதுச்சேரியில் தென்னந்தோப்பு சின்னத்தில் தங்கள் கட்சி போட்டியிட இருப்பதாக தெரிவித்தார்.

அதிமுக-வின் பொதுச்செயலாளர் தான் தான் எனக் கூறி சசிகலா தொடர்ந்த வழக்கு விசாரணையில் உள்ள நிலையில், கடந்த பிப்.24-ம் தேதி பசும்பொன்னில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில், புதிய கட்சியின் கொடியை அறிமுகப்படுத்தினார் சசிகலா. இந்நிலையில், சென்னை போயஸ் கார்டன் இல்லத்தில் நேற்று சசிகலா தங்களது கட்சியின் பெயரையும், சின்னத்தையும் வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்தக் கட்சிக்கு ‘அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்’ என பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கட்சி வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ‘தென்னந்தோப்பு’ சின்னத்தில் போட்டியிடுகிறது. ஜெயலலிதா பிறந்த நாளில் புதிய கட்சியின் கொடியை அறிமுகப்படுத்தினேன்.

திமுக என்ற தீயசக்தியை வேரறுத்து தமிழக மக்களை காக்க எம்ஜிஆர் ஒரு இயக்கம் கண்டார். தமிழக மக்களுக்காக, தொண்டர்களுக்காக நல்லது செய்ய முடியும் என்பதை செய்து காட்டினார்.

அவரைத் தொடர்ந்து மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தியவர் ஜெயலலிதா. பெண்கள் பாதுகாப்பு, பெண்கள் முன்னேற்றத்துக்கு எண்ணற்றத் திட்டங்களை அளித்தார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. தீயசக்தி திமுக மக்களை கசக்கிப் பிழிந்து வருகிறது.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நான், இதற்கெல்லாம் முடிவு கட்டவே, ஜெயலலிதா பிறந்த நாளில் கட்சிக் கொடியை அறிமுகப்படுத்தினேன்.

எம்ஜிஆர், தனது தொண்டர் ஒருவர் தொடங்கிய கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு அந்தக் கட்சியை நடத்தினார். அதேபோல், எம்ஜிஆர், ஜெயலலிதா மீது பற்றுகொண்ட ஒரு தொண்டர் தொடங்கிய கட்சியில் என்னை இணைத்துக்கொண்டேன்.

இந்தக் கட்சியின் சின்னம் தென்னந்தோப்பு. வரும் சட்டப்பேரவை தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிடுவோம். நான் மக்களோடு இருப்பேன்.

அதற்கு இந்த சின்னமே சான்று. ‘தனிமரம் தோப்பாகாது’ என்ற பழமொழிக்கேற்ப தோப்பாக வந்திருக்கிறோம். ஒருமித்த கருத்துள்ள கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்போம். எப்போதும் மக்களுக்காக, மக்கள் கட்சியாக செயல்படுவோம்.

எங்கள் பயணம் வெற்றிப் பயணமாக அமையும். தமிழக மக்கள் நியாயத்தை பார்ப்பார்கள், முதுகில் குத்தமாட்டார்கள். நல்ல மனம் படைத்தவர்கள். நல்ல தீர்ப்பை வழங்குவார்கள்.

திமுக அரசு மக்களின் பிரச்சினைகளை சரியாகத் தீர்க்கவில்லை. திமுக ஆட்சியின் அவலங்களை மக்களிடம் எடுத்துரைப்பேன். இந்த ஆட்சியில் 5 வயது பெண் குழந்தைகள் முதல் மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக ஆட்சியை ஓட ஓட விரட்டுவது தான் எங்கள் வேலை. இவ்வாறு அவர் கூறினார்.

## ‘கூலி’, ‘ஜெயிலர்’ பட பாடல்களைப் பயன்படுத்தத் தடை கோரி வழக்கு: சிஎஸ்கே அணி நிர்வாகம் பதிலளிக்க உத்தரவு

**சென்னை, மார்ச்.15:** சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கான முன்னோட்ட விளம்பரங்களில், ‘கூலி’, ‘ஜெயிலர்’ மற்றும் ‘ஜெயிலர்-2’ படங்களின் பாடல்களைப் பயன்படுத்த தடை கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சன் தொலைக்காட்சி நெட்வொர்க் நிறுவனம் தாக்கல் செய்த மனுவில், ஐபிஎல் போட்டிகளில் விளையாடும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கான முன்னோட்ட விளம்பரங்களில் எங்களது நிறுவனம் தயாரிப்பில் வெளிவந்த ‘கூலி’, ‘ஜெயிலர்’ மற்றும் ‘ஜெயிலர்-2’ ஆகிய திரைப்படங்களில் வந்த பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு தடை விதிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் தரப்பில், முன்னோட்ட விளம்பரங்களில் பயன்படுத்தப்பட்ட பாடல்கள் நீக்கப்பட்டுவிட்டன. அவை உரிய அனுமதி பெறாமல் பயன்படுத்தப்படாது என உறுதி அளிக்கப்பட்டது.

இதைப் பதிவு செய்துகொண்ட நீதிபதி, இந்த மனுவுக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை மார்ச் 16-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## மதுரை சர்வதேச விமான நிலையம்! அரசாணை வெளியீடு!

**மதுரை, மார்ச்.15:** மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவித்து மத்திய அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், மதுரை விமான நிலையத்தை சர்வதேச நிலையமாக தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட மத்திய அமைச்சர் அஸ்வினி வைஸ்ணவ் தெரிவித்ததாவது:

”மதுரை விமான நிலையத்தில் இருந்து சர்வதேச விமானங்களை இயக்க பல்வேறு விமான நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இந்த முடிவின்மூலம் மதுரை மீனாட்சி அம்மன் கோயில், கூடலழகர் கோயில், திருப்பரங்குன்றம் முருகன் கோயில், பழமுதிர்சோலை முருகன் கோயில், ராமேசுவரம் ஆகிய முக்கிய ஆன்மிகத் தலங்களுக்கான இணைப்பு வசதிகள் மேம்படும்.

கோயில் நகரத்துக்கு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து விமானப் போக்குவரத்து உறுதி செய்யப்படும்” என்றார்.

இந்த அறிவிப்புக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், மதுரை மக்களும் வரவேற்பு தெரிவித்திருந்த நிலையில், தற்போது அறிவிப்பை அமல்படுத்தும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் மதுரை விமான நிலையத்தில் விரைவில் சர்வதேச விமானங்கள் இயக்கப்படவுள்ளன.

## ஆதரவற்ற அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்து வரும் குடும்பத்தினர்க்கு இந்தியா பிரைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் அங்கீகாரம்

**சென்னை, மார்ச்.15:** இந்தியா பிரைட் புக்ஸ் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் என்பது தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் சிறந்த சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தளமாகும். பல்வேறு துறைகளில் முதல் முறையாகவும் உயர்மட்டத்திலும் மனித சாதனைகளை ஆவணப்படுத்துவதன் மூலம் சிறப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்திய பெருமை சாதனை புத்தகங்களின் முக்கிய அம்சமானது சிறந்து விளங்கும் மக்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது,குறிப்பிடத்தக்க பதிவுகளை ஆவணப்படுத்துகிறது. இந்தியாவின் பெருமையினை சர்வதேச அளவில் பதிவு செய்கிறது.

இந்தியா பிரைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் உலக சாதனையாளர்கள், கலாச்சார மைல்கற்கள் மற்றும் படைப்பு சாதனைகளை உள்ளடக்கிய பதிவுகளை ஆவணப்படுத்துகிறது, சரிபார்க்கிறது மற்றும் வெளியிடுகிறது. அவ்வகையில் தமிழ்நாடு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மயான பூமியில் மனைவி மகளுடன் உரிமை கோரப்படாத ஆதரவற்ற அனாதை பிணங்களை உரிய மரியாதையுடன் இறுதி சடங்கு செய்து நல்லடக்கம் செய்து வருகிறார் யோகா ஆசிரியர் விஜயகுமார். யோகா ஆசிரியர் விஜயகுமார் ஆதரவற்ற அனாதை பிணங்களை குடும்ப சகிதமாக தன்னலமற்ற மனித நேயப்பணியினை இந்தியா பிரைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனம் அங்கீகாரம் அளித்து அப்பணியினைப் பாராட்டி சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்தியா பிரைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தின் இந்திய தென்மண்டல முதன்மை நடுவர் சக்திவேல் ஆதரவற்ற அனாதை பிணங்களை மயான பூமியில் மனைவி மகளுடன் குடும்பம் சகிதமாக உரிமை கோரப்படாத உடலுக்கு உரிய மரியாதையுடன் கண்ணியமான முறையில் நல்லடக்கம் செய்யும் மனிதநேயப் பணியினை அங்கீகாரம் செய்துள்ளது என பதக்கத்தை அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.




இது குறித்து அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமார் பேசுகையில், ஆதரவற்றவர்களாக இருப்பவர்கள் காக்கப்பட வேண்டியவர்களால் கைவிடப்பட்டுள்ளவர்கள் ஆவார்கள். கைவிடப்பட்ட நபர்கள் தீராத தொற்று வியாதினாலோ, மது அடிமையினாலோ, கடன் பிரச்சினைகளாலோ, மனநலம் பாதித்த நிலையிலோ, குடும்ப சூழலாலோ ஏதாவது ஒரு வகையில் கைவிடப்பட்டுள்ளது களப்பணியில் தெரிய வருகிறது.

அவ்வாறு கைவிடப்பட்டவர்கள் பொது இடங்களில் பிச்சை எடுத்து உண்டு கிடைத்த இடத்தில் உறங்கி ஜீவனம் நடத்தி வருகிறார்கள். ஆதரவற்றவர்கள் வாழ்நாளிற்கு பிறகு சரக காவல்துறையினர் வழக்கு பதிந்து பெயர் விலாசம் தெரியாத நிலையில் ஆதரவற்ற அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்து வரும் எங்களுக்கு தகவல் அளிக்கின்றார்கள், தகவலின் அடிப்படையில் சரக காவல்துறையினர் முன்னிலையில் மயானத்தில் உரிமை கோரப்படாத உடலுக்கு உரிய மரியாதையுடன் நல்லடக்கம் செய்து வருகிறோம் என்றார்.

அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமார் இணையர் வழக்கறிஞர் சித்ரா விஜயகுமார், சட்டப்படிப்பு பயிலும் மகள் கீர்த்தனா இது குறித்து பேசுகையில்,இறுதிச் சடங்கில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுவது வழக்கமாக உள்ளது,பெண்கள் இறுதிச் சடங்கில் பங்கேற்பது தொடர்பான கருத்துகள் மாறுபடுகின்றன. சிலர் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள், சிலர் ஏற்றுக்கொள்கிறார்கள் சிலர் பெண்கள் இறுதிச் சடங்கில் பங்கேற்பது மரபுக்கு எதிரானது என்கின்றனர்.

சில பெண்கள் தங்கள் பெற்றோருக்கோ அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கோ இறுதிச் சடங்குகளை செய்வதில் பெருமிதம் கொள்கிறார்கள். நாங்கள் உற்றார், உறவினர்கள், சுற்றத்தார், நண்பர்களால் கைவிடப்பட்டு இறந்த உரிமை கோரப்படாத ஆதரவற்ற அனாதை பிரேதங்களுக்கு ஒரு மகனாய், ஒரு மகளாய், ஒரு பேத்தியாய் இருந்து உரிமை கோரப்படாத உடலுக்கு உரிய மரியாதையுடன் நல்லடக்கம் செய்து வருகிறோம். ஆதரவற்ற அனாதை பிணங்கள் நல்லடக்க பணிக்கு நாங்கள் எங்களால் இயன்ற அளவு ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் அளித்து வருகிறோம் என்றார்கள்.

## காதலனுக்கு கொடுத்த நகைகளை திருப்பி கேட்டதால் தாயை கொல்ல முயன்ற கல்லூரி மாணவி கைது

**நாகர்கோவில், மார்ச்.15:** நாகர்கோவில் பிள்ளையார்புரம் அன்னம் வலை கம்பெனி தெரு பகுதியை சேர்ந்தவர் சுந்தர்ராஜ். அவரது மனைவி கலாவதி. இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். மூத்த மகள் நர்சிங் கல்லூரியிலும், இரண்டாவது மகள் சுருதி (வயது 19) நாகர்கோவிலில் உள்ள கல்லூரியில் பி.காம். முதலாம் ஆண்டும் படித்து வருகிறார்.

மாணவி சுருதி, தனது கல்லூரியில் தன்னுடன் படிக்கும் திங்கள்சந்தை அருகே உள்ள மேற்கு நெய்யூர் பகுதியை சேர்ந்த அபிலாஷ் (19) என்ற மாணவரை காதலித்துள்ளார். இந்தநிலையில் கலாவதி வைத்திருந்த 10 பவுன் நகைகள் மாயமானது.

இதுகுறித்து சுருதியிடம் கேட்டபோது, தன்னுடன் படிக்கும் அபிலாஷ் அவசர தேவைக்காக பணம் கேட்டதால், நகைகளை கொடுத்ததாக கூறியிருக்கிறார். அதனைக்கேட்டு அதிர்ச்சியடைந்த கலாவதி, நகைகளை திருப்பி வாங்கித் தருமாறு கேட்டு மகளிடம் தகராறு செய்தார்.

அவர் நகையை திருப்பி வாங்கித்தராததால் தாய்-மகளுக்கிடையே தினமும் தகராறு நடந்து வந்திருக்கிறது. இதற்கிடையே சுருதியின் வீட்டுக்கு அபிலாஷ் நேற்று வந்தார். அவரிடம் கலாவதி, நகைகள் எங்கே? என்று நேரடியாக கேட்டிருக்கிறார்.

அதில் ஆத்திரமடைந்த அபிலாஷ், உருட்டு கட்டையால் கலாவதியின் பின் தலையில் தாக்கினார். இதில் நிலைகுலைந்த அவர் சுருண்டு கீழே விழுந்தார். இதையடுத்து அபிலாஷ் மற்றும் சுருதி ஆகிய இருவரும் சேர்ந்து சுடிதார் துப்பட்டாவால் கழுத்தை இறுக்கி கலாவதியை கொல்ல முயன்றனர்.

அதே நேரத்தில் கலாவதியின் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் அங்கு ஓடி வந்தனர். அப்போது சுருதி தனது காதலனுடன் சேர்ந்து தாய் கலாவதியை கொல்ல முயற்சி செய்து கொண்டிருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

உயிருக்கு போராடி கொண்டிருந்த அவரை உடனே அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு கலாவதிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து சுசீந்திரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

அதன்பேரில் அபிலாஸ் மற்றும் சுருதி ஆகிய இருவரின் மீதும் சுசீந்திரம் போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிந்து கைது செய்தனர். விசாரணைக்கு பின் இருவரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். சுருதி தக்கலை கிளை சிறையிலும், அபிலாஷ் நாகர்கோவில் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com